பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1–12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. , 2.
தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வரு கார்த்திகை-மீ 6 உ (21—11—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 29

## உண்மையான கதர்

கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற
சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், உச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா
விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்....

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப் பிசம், வயிற்று வலி, ஏப்பம், மார்நோய், பக்க நோய், முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ. 1—8—0.

## கீழ்காய் நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகுவதனால் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகள் நீங்கும். மூளைக் குளிர்ச்சியும் கொழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

கீழ்காய் நெல்லித் தைலம்
8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0
ஷை டின் 3-க்கு ரூ. 3—4—0
வி. பி. தபாற் செலவு வேறு

எம். சி. நடேச வைத்தியர்,
சுதேச ஔஷதசாலை,
கு. மேல வீதி, கும்பகோணம்.

## "ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0
1 அணா ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனாம்.
[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ்.
சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதறாஸ்.

இனாம்! இனாம்!!
டேபில் டயம்பீஸ் இனாம்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனாம் டைம்பீஸுடன் ஷை ரிஸ்டு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,
மதராஸ்.

## மஹேந்திரஜாலம்

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா விநோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்.
படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா
படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,
சென்னை.

## "தமிழன்"

(வாரப்பத்திரிகை)

பூர்வ தமிழர் சமயம் யாது?
தமிழர் தாழ்ந்தவரானதேன்?
தாழ்த்தபட்டவர் முன்னேறுவதெப்படி?
இவைகளையறிய "தமிழன்" பத்திரிகை அவசியம் படிக்கவேண்டும்.

உள்நாட்டுக்கு வருட சந்தா ரூ. 3 0 0
வெளிநாட்டுக்கு ,, 4 0 0

ஜீவகாருண்ய சங்கம்,
ராபர்ட்சன்பேட்டை, கோலார், தங்கவயல்

## ஜீர்ணாமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.

அஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வரகாசங்கள் முதலியவற்றை உடனே குணபடுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

## கண் தைலம்.

சிறந்த அனுபவ நேத்ர ரோக நிவாரணி.

இம்மேன்மையான தைல ஸ்நாநத்தால் கண் நோய், கண் குத்தல், கூசல், நீர் வடிதல், கண் மங்கல், மேகநீரால் குருடாதல், அந்திமாலை, பீளை கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல். பூவிழுதல், கண் சிவப்பு, கண் இமை புருவங்களில் வலி, கண் புகைச்சல், தலை நோய்களும குணமாகிவிடும். கண் குளிரும், ஒரு டின் ரூ. 3. வி. பி. அணா 8.

பிரஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம்



குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.

64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி, மதராஸ்

## எதுவேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | —8 |
| மனோவசிய சாஸ்திரம் | —8 |
| ரதி சாஸ்திரம் | —4 |
| ஸதிரீ புருஷ ரகசியம் | —0 |
| சதிபதிகளின் மர்மம் | —0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | —0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | —0 |
| மதனாதி ரஹஸ்யம் | —0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

"பணம் சம்பாதிக்கப் பாதைகள் 200"
என்னும்

## 200 தொழில் முறைகள்.

4 பாகங்கள், 34 அத்தியாயங்கள்.

சொற்ப தொகையினால் சோப், செண்டு முதலியவைகளைச் செய்ய ஆரம்பித்தவர்கள் இப்போது லட்சாதி பிரபுக்களாய் இருக்கிறார்கள். பீச்சாம் ஹாலோவே முதலிய சிலர் பேர்போன மருந்துகளைச் செய்து கோடீஸ்வரர்களாக ஆகிவிட்டார்கள். இதுபோன்ற தொழில்களை நீங்கள் என் சுலபமாய் ஆரம்பிக்கக்கூடாது.

200 அபூர்வ தொழில்களின் செய்முறைகளடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 4—0—0. வி. பி. சார்ஜ் வேறு.

இதன் முழு விவரமடங்கிய 14 பக்கம் துண்டுப்புத்தகத்திற்கு 1 அணா ஸ்டாம்புடன் எழுதவும்

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
ப், திருச்சினாப்பள்ளி.

நம்பிக்கையான
வியாபார ஸ்தலம்.
சகல விதமான புஸ்தகங்கள்
கதர் துணிகள் மருந்துகள்
கடிகாரம் ஷரட் சாமான்
முதலிய இதர எல்லா
சாமான்களும்
கிடைக்கும்.
முன்பணத்துடன் ஆர்டர்
அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி
கம்பெனி.
தபால் பெட்டி 292.
6–99 பவழக்காரத்தெருவு,
சென்னை.

# நிலைகுலைந்த தமிழ்மக்கள்

(மதுரைத் தமிழர் சங்க வெளியீடு.)

தமிழர்கள் உயர்வு சிறப்பினைத் தமிழ்நாட்டுப் பழமையான தத்துவங்கள் இன்றும் புலப்படுத்துகின்றன. தமிழரின் பண்டைக்காலவாழ்வு பிறநாட்டாருக்கு உயர்ந்த வழிகாட்டியாக விருந்தது. எல்லா மொழியாளரும் திட்ப நுட்பங்களால் சிறந்து விளங்கும் அரிய தமிழ் நூல்களை அந்நாளில் மிகவும் மதித்துப் போற்றி வந்தார்கள். தொழில் வளமும் நிலவளமுஞ் செறிவுற்றுயர்ந்திருந்த தமிழ் மக்கள் நாட்டின் விளை பொருள்களையும் செயற்கைப் பொருள்களையும் கப்பல் கப்பலாயேற்றிக் கடல் சூழ்ந்த தீவங்களிலும் கண்டங்களிலும் உள்ளார்க்குக் கொடுத்துதவி அங்குள்ள வளங்களை வாரிக்கொண்டு வந்திறங்கும் கப்பல் வணிகராய் உலக மதிக்க வாழ்ந்து வந்தார்கள். பாண்டிய நாட்டுக் கப்பல் வணிகத்தால் அக்காலத்தில் நாகரிகம் பெற்றிருந்த உரோமாபுரி நாடு மிகவும் செழிப்புற்றிருந்தது. உரோம நாட்டின் பழைய செம்பொற் காசுகள் பல மதுரை நகரத்திலும் வைகையாற்றங் கரையிலும் கண்டெடுக்கப்பட்டமை யாவருமறியக்கூடியதாகும்.

முன்னாளில் சாதியென்னும் ஓர் சொல்லைக்கூடக் கேட்டறியாத தமிழ் மக்களாற்றான் தமிழ்நாடு ஒரு மறுவுமின்றி அலங்கரிக்கப் பட்டிருந்தது. மலை முற்றங்களிலும், சோலைகளிலும், நகரங்களிலும், பாலை நிலங்களிலும் கடற் கரைகளிலும் தெய்வ வழிபாட்டினை ஆங்காங்குள்ள தமிழர்கள் ஒருங்கு கூடி மகிழ்வுறச் செய்து வந்தார்கள். இனிய தமிழ்ச் சொற்களால் ஆரவாரத்தோடு வாழ்த்தித் திருவிழாக் கொண்டாடி நோயில்லாத மேனியராய் அழகொடு பொலிவுற்றிருந்தார்கள்.

ஐம்பொறியையும், ஐம்புலனையும் கடந்துபோய் அப்பால் அரிய நெறிக்கண்ணே மேனோக்கிச் சென்று தன்னந்தனியான ஒப்பற்ற நிலையில் ஒப்பற்ற நாதனை விளக்கும் உயர்நிலை வாழ்வே பொருளிலக்கணங்கூறும் தமிழர் கண்ட தத்துவமென்றறியவேண்டும்.

'உலகவரம்பும் அத்துவவரம்புங் கண்டு அவ்வழி நின்ற புலவர்களின் வாய்ச்சொல்லே கட்டளைச் சொல்லாகப் போற்றித் தமிழ்நாடு முற்றும் அந்நாளில் வரம்பு கடவாது நடந்துயர்வுற்றிருந்தது.

தற்போதுள்ள நாட்டின் கோலத்தைக் கண்ணுற்றால் கண்ணீருகுக்கவேண்டி யிருக்கிறது. முற்காலத்திய எல்லாக் கோட்பாடுகளும் தட்டுண்டு தடுமாறிப்போயிற்று. நாட்டினுண்மைச் செயலு மழிந்துபோய்விட்டது. நாட்டின் குடிகளாகிய மக்களனைவரும் தங்களைத் தமிழரென்று சொல்லிக்கொள்ளும வாய்ப்பாட்டினை மட்டும் விட்டுவிட இன்னுமவர் துணிந்துவிடவில்லை. இத்தன்மையான நிலைகுலைந்த தமிழர்களையே நாடு வகித்திருக்கின்றது. சிறவாத வாழ்வில் மயங்கிக்கிடக்கும் தமிழர்கள் பிற நாட்டார் கண்முன் புழுத்திற்றுப் போய்க்கிடக்கும் மரக்கட்டை போலச் செயலற்றுப் போயிருக்கிறார்களென்பதை எவருமறியக்கூடும்.

கொஞ்ச காலத்துக்கு முன்பு வந்த வடநாட்டாசாரக் குழப்பத்திலவிழ்ந்து மூர்ச்சித்திளைத்துப்போன நகரங்களில் வசித்துவரும் தமிழர்கள் அந்நாள் முதலாகத் தங்கள் தத்துவங்களையும் ஆசாரங்களையும் கைநழுவ விட்டு விட்டார்கள். தங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் பொருந்தாத பிறநாட்டாரிட்ட கட்டளைப்படி பயனில்லாத கொள்கைகளில் எதற்காக நுழைந்தார்களென்று தெரியவில்லை. அடங்கிக்கிடக்கும் சாதிப்பிரிவுகளையும், புதிது புதிதான போலிக்குடும்பச் சடங்குகளையும், தமிழ் மொழிகளில் காணப்படாத மதப்பூசக் கொள்கைகளையும் தங்கள் உரிமையெனக்கொண்டு இடர்ப்பட்டு மயங்கி இயலிழந்த தமிழராய் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் நகரங்களில் வசித்துவருந் தமிழர்கள் நாட்டின்கண் வசித்துவருந் தமிழ்க்குடிமக்களுக்கு மாறுபட்டவர்களாகி இரண்டு தோணியிற் கால்வைத்தவர்களாகிப் போய்விட்டார்களென்பதை நாட்டிற்பிறந்த ஒவ்வொரு தமிழனும் அறிந்து வைத்திருக்க வேண்டியது.

வடமொழி நூலாகிய மநு முதலிய நூல்கள் கூறிய ஜாதிகளை விந்தமலைக்கு வடக்கேயுள்ள வடநாடொன்றே வகித்திருந்து பின்பு மேற்கண்ட மலைக்குத் தெற்கேயுள்ள நமது நாட்டிலும் ஆரியர் பிரவேசித்து பலாத்காரமாக ஜாதி விதைகளை விதைத்தார்கள். நகரப் பகுதிகளில் மட்டும் சாமர்த்தியமாகக் கவனிப்போடு வளர்த்துவந்தார்கள். அதனால் ஜாதிக்குமேல் ஜாதியாய் வேண்டிய சலங்களை ஆரியப்பார்ப்பார்கள் நிலைநிறுத்திக் கொண்டார்கள். ஜாதிக்களை மண்டிப்போய் காடு கட்டிழந்து நிலைகுலைந்த நகரத்தமிழரால் நாட்டின் உட்பகுதிகளும் மெலிவெய்தித் தாறுமாறாகப் போய்விடும்படி மாற்றப்பட்டு வருகின்றது.

நாட்டாசாரத்தின் பண்டை வழக்கத்தை நாட்டின்கண்ணே கிராமத் தொகுதிகளில் வசிக்கும் தமிழ்மக்களனைவரும் இன்றுவரை மாறுபாடின்றிப் பெரும்பாலும் அநுபவித்து வருவதால் நாட்டிற்குரிய நலங்களோடு பொருந்திய "நாட்டார்" என்ற பழம் பெயர்பெற்றுக் கிராமங்களில் வாழ்ந்துவரும் தமிழ் ஜனங்களின் பெருமையை நீங்கள் அறிந்துவைத்திருக்கவேண்டியது.

மேலே கூறிய வகையால் தமிழ் ஜனத்தை நாட்டுத் தமிழர்; நகரத்தமிழரென இரண்டாகப் பிரித்தறியவேண்டி யிருக்கிறது. ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கு மாதிரியையும் அறியவேண்டி யிருக்கிறது. அதன்பின் இந்நாட்டிற் கிடைஞ்சல் படுத்தி நம்மை ஏமாற்றும் வஞ்சகக்காரரின் கொள்கைகளையே மாற்றவேண்டுமென்று மனதிருத்திக்கொண்டு எப்படி வேலை செய்யவேண்டுமென்றறியவேண்டியது.

நாட்டுத் தமிழருக்கும், நகரத் தமிழருக்கும் வேற்றுமைகளை கீழ்க்காட்டியவாறே எல்லா வகைகளினும் நீங்கள் கண்டறியவேண்டியது.

**நாட்டுத்தமிழருணவு**—கோழி கூப்பிடும்போது தூக்கத்தினின்று எழுந்து செய்வன செய்து நாட்டிற்கொத்த வழக்கத்தில் வந்தபடி உணவினையுண்டு அயர்வில்லாமல் வேலைசெய்து நோயில்லாது பெரும்பாலும் வாழ்ந்து வருகிறார்கள்.

**நகரத்தமிழருணவு**—ஆரியரின் சொற்படி பட்டினி விரதங்களில் நாட்கழித்து நாட்டியல்பிற்கும் வழக்கத்துக்கும் ஒவ்வாத காலவரம்பில்லாத உணவுஞ் சிற்றுண்டிகளும் நேர்ந்த வண்ணம் உண்டு வலியிழந்த ஆக்கையராய்த் தளர்ந்து போய்விடுகிறார்கள்.

**நாட்டுத்தமிழர் பெயர்முதலிய**—பண்டைகாலந்தொட்டுத் தம் முன்னோர்க்கிட்டு வழங்கிவரும் தமிழ்ப் பெயரினையே தாங்களும் பெற்று, உடை நடை வழக்கங்களில் மாறுதலடையாமல் ஆடம்பரமில்லாது ஒழுங்குற வாழ்ந்து வருகிறார்கள்,

**நகரத்தமிழர் பெயர் முதலிய**—தமிழ்ப்பெயர்செவிக்கினிமையாயில்லையென்றும் இழிவாகக் கருதப்படுகிறதென்றும் எண்ணிக் கைநழுவவிட்டு ஆரியப்பெயர்களை நமக்[illegible] வாய்கூசாது வைத்து நாட்டின் பெயரைக்கெடுத்து மாறிப்போன பேர்வழிகளாய்ப் பெரும்பாலும் காணப்படுகிறார்கள். நாட்டிற் பிறவாத நடை உடை வழக்கங்களில் மயங்கி ஆடம்பரமே அழகென நினைத்து வரம்பில்லாதிருந்து வருகிறார்கள்.

**நாட்டுத்தமிழரின் தெய்வம்**—ஊர்த் தெய்வமுங் குலத் தெய்வமுமே, நாட்டுக்குப் பொதுவான தெய்வமுமெனத் தமிழ்ப் பெயர்கொண்ட நாட்டிற்குரிய தெய்வங்களை முறையே ஊராருஞ் சுற்றத்தாரும், நாட்டாருமாகக்கூடித் தாங்களே மனமார ஏற்றிப்போற்றிச் சிறப்புறச் செய்து வருகிறார்கள்.

**நகரத்தமிழர் தெய்வம்**—குலதெய்வமட்டில் தமிழில் பெயர்கொண்ட தங்கள் தெய்வமாகவும், நகரப்பொதுவில் கோயில்கொண்ட தெய்வங்களை வடமொழிப் பெயர்கொண்ட வேற்றுத் தெய்வங்கள் போன்றும் பாராட்டுகின்றனர். குலதெய்வத்தைத் தமிழ்நாட்டாசாரத்தின்படி தங்களாலே எல்லாச் சிறப்புஞ் செய்யப்படுகின்றன. நகரங்களில் கோயில்கொண்ட தெய்வங்களைத் தமிழ்நாட்டவர்களாலும் தமிழர்க்குரிய வழக்குகளைக் கொண்ட தமிழ் மொழிகளாலும் பூசித்துச் சிறப்பிக்கப்படாமல் வடமொழியால் ஆயிரத்தெட்டுப் பேர் சொல்லி வடநாட்டாராலருச்சிக்கப்படுகின்றன. விகற்பமான பலஜாதி வேடம்பூண்டு நகரத்தமிழர் அனைவரும் கோயிலினுள்ளிடங்களில் செல்லுபடியில்லாத அயலார்போலிருந்து வருகிறார்கள்.

**நாட்டுத்தமிழர் சடங்குகள்**—பிறப்பிலும், கலியாணத்திலும், சீமந்தத்திலும், இன்னும் பிறவற்றிலும் மட்டாகச் செலவுசெய்து வருகிறார்கள். தங்கள் குல வழக்கப்படி நாட்டாசாரத்தைப் பின்பற்றித் தாங்களே தங்கள் சடங்குகளைச் செய்து வருகிறார்கள். தெய்வங்களுக்குச் செய்யும் சிறப்புகளில் ஆண் பெண் அடங்கலாக நாட்டாரனைவரும் திரண்டு பெருமுழக்கத்தோடு பெருஞ்செலவு செய்து கொண்டாடுகிறார்கள். சிறப்பை யொட்டித் தெய்வத்திற்குக் கூத்து முதலிய ஆடல், பாடல்களை நன்கு நடத்திவைப்பார்கள். இத்தகைய சடங்குகளில் வடமொழிக்கும் வடவாரியருக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது.

**நகரத்தமிழர் சடங்குகள்**—பிறப்பு, கலியாணம், சாந்திக்கலியாணம், சீமந்தம் முதலிய எல்லாச் சடங்குகளிலும் தமிழ்மொழியாகிய தங்கள் தாய்மொழியைத் தடுத்துவிட்டுச் செவிடன் காதில் சங்கூதினாற்போல வடமொழியை முழக்கச் சொல்லித் தங்கள் தாய்நாட்டின் சுதந்தரச் செல்வத்தை வடதிசைப் பார்ப்பனரிடம்கொடுத்து கீழ்ச்சாதிகளாய் நின்று வணங்கி அவர்கள் சொல்லுவதெல்லாங் கேட்டு வஸ்திரம் பணங்காசு சகல சாமான்களையும் இடுப்பின் மேல் வேஷ்டியை இறுக்கிக்கட்டிக் கொடுத்தனுப்புவார்கள். தமிழையும் தாய்நாட்டையும், தங்களையும்பற்றி விசாரித்தறிந்தபோதுதான் தங்கள் ஆண்மையைத் தெளிவாயுணர்வார்கள்,

**நாட்டுத்தமிழரின் மாவணகாரிய முதலியன**—இறந்துபோனவருடைய ஆக்கையைக் கொட்டி முழக்கிச் சுடுகாடு சேர்த்து சமத்தில் வைத்து நெருப்பிட்டு நீறாக்கி விடுவர். மறுநாள் நீறினுங் காடாற்றி மிஞ்சிய என்பினைக் குவித்துச் செய்வன செய்து ஆற்றுநீர்போன்ற விடங்களில் கொண்டுபோய் விட்டுவிடுவர். துக்கந் தீரும் பொருட்டு வீட்டுக்குடையவர் செளகரியமான ஒருநாளில் கிளைஞர் சூழவிருந்து வருத்தத்தினைத் தீர்த்துக்கொள்ளும் "இழவுகூட்டல்" என்னுஞ் சடங்கினைச் செய்துமுடித்து அதன்பின் நல்ல காரியமெதையுஞ் செய்யத்தொடங்குவார்கள். வீரனது ஆக்கையை ஊரார்களனைவரும் சிறப்புடன் ஊர்வல[illegible] தக்க ஓரிடத்தில் வைத்துக் கட்டிடம் எழுப்பி அவ்வீரனுடைய உருவமைந்த கற்சிலை[illegible] ஊர்ப்பொதுவில் [illegible]யாக நாட்டித் திருவிழாக்கொண்டாடி வீரம் பேசி கவிப்பர். போரில் [illegible] இறந்திக்காலை மட்டும் உழைத்தவர் முதலிய பலர் இறந்துபோயின் தகுதியான இடத்தில் வைக்கப்பெற்று கல்நாட்டிச் சிறப்புச் செய்வர்

ஆண்டுதோறும் ஓர் நாளில் இறந்த வீரனுடைய கற்சிலைமுன் ஊரார் நிறையவுற்றுத் திருவிழாவெடுப்பார். கல்நாட்டியுள்ள இடங்களில் இறந்தவர்க்குரியவர் முக்கிய நாள்களில் சிறப்புச்

செய்வார். இவரொழிந்திறந்த மற்றையவர்க்கு ஆண்டுதோறும் செய்வது கிடையாது. இத்தகைய காரியங்கள் எல்லாவற்றிலும் வடமொழிக்கும், அம்மொழிக்குரியரெனக் கூறிக்கொள்ளும் பார்ப்பனருக்கும் எந்தக்காலத்திலும் சம்பந்தமே கிடையாது என்பதை அறியவேண்டியது.

**நகரத்தமிழர் மரணகாரிய முதலியன**—இறந்துபோனவருடைய ஆக்கையை நீராட்டி அலங்கரித்து வடமொழியால் வேண்டிய மதச்சடங்குகள் செய்து சுடுகாட்டிற்சேர்த்து அங்கும் வடமொழிபாஷையில் செய்து நெருப்பிலிட்டு எரித்துவிடுகிறார்கள். பெரும்பாலர் சாதாரணமாய் சுடுகாடு சேர்த்துக் கொள்ளிவைத்தெரித்து விடுகிறார்கள். பின்பு 10, 12, 16ம் நாளில்பார்ப்பனரை வரவழைத்து அவர் சொற்படி வடமொழிச் சொல்லினை அருத்தம் பொருத்தமில்லாது கேட்டு ஆராயாது பெரும்பாலும் குருட்டு நம்பிக்கை வைத்துச் செய்கிறார்கள். கடன் பட்டாவது, பார்ப்பாருக்கு ஆடை, அரிசி முதலிய தானியங்கள், பாற்பசு முதலியவற்றை திரவியங்களோடு சேர்த்துக்கொடுத்து இறந்தவரையும், தம்மையும் பாவத்தினின்று விடுவித்துக்கொண்டதாகக் காலில் விழுந்து வணங்கி மரியாதையாக அனுப்புகிறார்கள். பார்ப்பனர் நிபந்தனையினின்று விடுபட்ட பின் நீரில் குளித்து வீடுசேர்ந்துணவுண்கின்றார்கள். அதன் மேல் வழக்கப்படி மொய்முறை நடக்கின்றன. இறந்தவர்க்காக வீட்டுக்குடையவர் ஓராண்டின்வரை மாசந்தோறும் மாசியம் என்று பார்ப்பார் சொற்படி முடிந்தமட்டிலும் செய்கிறார்கள். அம்மட்டோடு மாதச் சடங்கும் செலவும் தீர்ந்தது. ஆயுள்வரை வருடச்சடங்கும் செலவும் பார்ப்பனர் சொற்படி வருடந்தோறும் ஏராளமான சாமான்களுடன் பார்ப்பார் வடசொல்லின்படி இணங்கி அவரிடந் திரவியத்தோடொப்புவித்து வணங்கி அவர்களால் வாழ்த்தப்பெறுகிறார்கள். "திதி" என்று சொல்லித் தங்கள் நாட்டுத் தமிழ் வழக்கந்தானென்று கருதிவருகிறார்களோ வேறென்ன இரகசியமோ நீங்கள்தான் அறியவேண்டியது

இத்தகைய காரியங்கள் தமிழர்க்கு எக்காலத்திலும் பொருந்தாததாயிருப்பினும் அவற்றினுண்மையறியாது செய்துவருகின்ற நாள்வரை முக்கியமாகவே கருதவேண்டியிருக்கிறது-

இங்ஙனம் எடுத்துக் கூறுவதால் தமிழ் நாட்டார் செய்திகள் ஒருவாறறியக் கிடக்கின்றன. தமிழருக்குப்பாஷை தமிழாகத்தான் என்றைக்கும் இருந்துவருகிறது. அப்படிக்கிருக்க நகரத்திலுள்ளார் மட்டும் வடமொழிச் சொல்லின் வாய்ப்பட்டுத் தமிழ்நாட்டு வழக்கத்தை முக்கிய சடங்குகளில் விட்டொழிந்தமை காலவசத்தால் ஒரு சந்தர்ப்பத்தில் நேர்ந்துவிட்டதென்பதைத் தெளிவாய் உணர்த்துகின்றது. தாங்களே தங்கள் சடங்குகளை செய்யக் கூடாதபடி நேர்ந்துவிட்டது பார்ப்பனரை வணங்கி அவர் சொற்படி நடந்துவரும்படி இன்றுவரைக்கும் நேர்ந்திருக்கிறது

தமிழ் மக்களாய்ப் பிறந்த அனைவரும் இவற்றினை ஆரஅமர யோசித்துத் தங்களுக்கு நிகழ்ந்துள்ள ஆண்மைகுலைந்த இடையூற்றினை மாற்றிக்கொண்டு ஆண்டகைமையுடன் வாழ்ந்து வரவேண்டும்

ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்களையும், தங்கள் பாஷையினையும் தங்கள் நாட்டின் பிறப்புரிமைகளாக ஐக்கியத்தோடு காத்துவரும் இக்காலில் தமிழ் மக்கள் தங்களையும, தங்கள் பாஷையினையும் தங்கள் நாட்டின் பிறப்புரிமைகளாக்கிக்கொண்டு ஐக்கியத்தோடு ஆங்காங்கு கூடித் தீர்மானித்துக்காத்து வரவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்

ஒவ்வொரு இடத்திலும் செல்வாக்குள்ளவர்களாய் வசித்துவரும் நாட்டுத் தலைவர்கள் நாடு கூடும்படி வேண்டியமுயற்சி எடுத்துக்கொள்ளாது போனால் நாடு அடியோடு கெட்டுப்போய் விடும்

நாட்டுக்குப்பிறந்த நாம் ஆண்மக்களாகவிருந்தும் தந்திரம் பேசி அடிமைகொள்ளும் பார்ப்பனரிடம் ஏமாந்துபோய்த்தெரியாது வணங்கியும் கீழ்ச்சாதிகளாகி ஒதுங்கியும் ஆண்மையிழந்துவிட்டதால் மேல்சாதியாகப் பார்ப்பார் விளங்கி வருகிறார்கள்

வீரனைத் தலைவராய்க்கொண்ட குடியெல்லாம் வீரம்பொருந்தியேயிருக்கும். செல்வாக்கும் ஆண்மையும் படைத்த தலைவனையுடைய குடிகள் வாக்கு வன்மையும் ஆண்மையும் பொருந்தியேயிருக்கும். தமிழ்க்குடியிற் பிறந்த தலைவன் ஒருவனே தன் குடிகளையும் தன் நாட்டையும் கௌரவம் குறையாது வைத்து காத்துவருவான்,

கையெடுத்து கும்பிடும்படியும், ஒடுக்கத்தோடு காலில் விழுந்து வணங்கும்படியும் ஆண்மை மிகுந்த நாட்டிற்பிறந்த தமிழ் மக்களாகிய நம்மைக் கீழ்ச்சாதிகளாய் "சாமி" என்று தங்களை சொல்லிக்கொண்டே வரும்படியாகவும் நடத்திவரும் வேற்று நாட்டாராகிய பார்ப்பனரிடம் இன்னும் கைகட்டும் நாடாயிருந்துவிடவேண்டாம்.

மகமதியரும், வெள்ளைக்காரரும், இன்னும் மற்றவரும் அன்னிய நாட்டிலிருந்து பார்ப்பனரைப்போல வந்தவர்கள்தாம். ஆனால் பார்ப்பாரைப்போல் நமக்குள் நுழைந்து நம்மை கீழ்க்குடியிற் பிறந்தவர்களாக்கி உயர்ந்த சாதியாகத் தாங்கள் இதுவரை நடந்துகொள்ள ஒரு சிறிதும் எண்ணங்கொள்ளவில்லை. ஆகையால் மகமதியரும், வெள்ளைக்காரரும் இன்னும் மற்றவரும் நம்முடைய சகோதரராக நாம் பாவித்து வருவதில் யாதொரு ஆட்சேபனையுமில்லை.

தமிழ் நூலிலும் தமிழ் நாட்டிலும் தமிழ் மக்கள் கேட்டிராத விதவிதமான சாதிகளையும், பல வகைப்பட்ட மதங்களையும் தங்களுக்குச் சாதகமாய்க் கொண்டுவந்து இறக்கி நாட்டின் ஒற்றுமையையும், ஆண்மையையும், வேர்ப்பிடுங்காய் பிடுங்கி எறிந்து வடமொழியேட்டை ஊரூராய்த் தெருத்தெருவாய் அவிழ்த்து விரித்துவைத்து பார்ப்பனர் தங்களை மேல்ச்சாதியென்று சொல்லிக்கொள்ளலாயினர்.

தங்கள் சொற்படி வணங்கிக்கேட்டு அதன்படி நடந்துவரவேண்டிய கீழ்ச்சாதியென்று சொல்லி வஞ்சித்து வந்ததற்கு இணங்கிப்போனகாலம் மலையேறிப் போய்விட்ட தை நீங்கள் அறியவேண்டும்.

சாதிசாதியாய்ப் பிரித்து அழிமானமாக்கி நமது நாட்டின் ஐக்கியத்தை கெடுத்த வடமொழி நூலை நம்பி இனி எந்தக் காரியங்களையும் ஆராயாமல் செய்துவிடவேண்டாம்.

இத்தகைய உங்கள் கடமையை நீங்கள் மறந்துவிடுவதால் உங்களை ஈன்று வளர்த்துவரும் உங்கள் தாய்நாட்டுக்கும் தாய் மொழிக்கும் உலைவைத்த மாதுர்துரோகிகளாய்ப் போய்விடுவீர்கள் அன்றியும் உங்கள் மரபில் வரும் உங்கள் மக்களால் எந்நாளும் மறவாது தூற்றப்படுவீர்கள்,

உங்கள் வறுமையை விட்டுவிலகி; உங்கள் பாத்தியமான உங்கள் நாட்டில் மறைந்து புதைந்து கிடக்கும் உங்கள் புதையலை ஞாபகத்தோடு தோண்டியெடுத்து எல்லா மேன்மையும் முன்போல் பெற்று சமநிலையில் நிலைபெற வாழ்ந்து வருவீர்களாக,

ரா. கோவிந்தசாமி பிள்ளை.

## சித்தவைத்தியர் அ. சாமிநாதபிள்ளை சிவபதம் அடைந்தார்.

இவர் தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணத்தில் பரம்பரையாகச் சித்த மருத்துவத்தைச் செய்துவரும் குடும்பத்தில் பிறந்தவர், வைத்தியர்களுக்கு இன்றியமையாத சோதிடம், பஞ்சபட்சி, சரநூல், தூதலட்சணம், நாடி நிதானம் முதலியனவகளில் மிகச்சிறந்த அறிவுடையவர். இவர்காலை, நண்பகல், மாலை முக்காலமும் பிராணாயாமத்தை தவறாமல் செய்து வருபவர். இவர் அரிய மருந்துகளை முடித்துக் கொடிய நோய்களை நீக்குவதில் வல்லவர். சிவபெருமானிடத்து என்றும் மாறாத அன்புடையவர். இவர் பொழுதை அறிவதற்கு கடிகாரத்தையாவது, சூரிய சந்திர நட்சத்திரங்களையாவது பாராமல் தமது மூக்கில் நடைபெறும் சுவாசத்தைப் பார்த்தே இரவு, பகல் எந்த நேரத்திலும் நிமிஷத்தோடு காலத்தைக் கூறுவார். இவர் ஒரு ராஜயோகி. இவர் நாள்தோறும் வெய்யிலில் இருந்து வியர்வை உண்டாகும் வரையில் ஏதாவது ஒரு வேலை செய்து வருவார். நாள்தோறும் இரண்டு மைல் தூரமாவது நடந்து சென்றுவருவார். இவர் காலையில் நீராகாரத்தைத் தவிர காபி, தேயிலைநீர் முதலியவைகள் குடித்தவரல்லர். இக்காலத்து வைத்தியர்கள் பலரைப்போல் விளம்பரஞ் செய்து பணத்தையும், புகழையும் மிகுதியாக சம்பாதிக்க அறியாதவர். இவருடைய இரண்டு ஆண்பிள்ளைகளில் இளையமகன் சென்னையில் சுமார் இருபது வருடங்களாக தமிழ் வைத்தியசாலை ஒன்றை நடத்தியும் சித்தவைத்தியத்துக்காக பத்துப்பதினொருவருஷங்களாக வேலைசெய்தும் தென்னாட்டில் மருத்துவத் தொழிலை பரம்பரையாகச் செய்துவரும் மருத்துவ வகுப்பினரின் கீழ்மையை அகற்றி அவர்கள் பண்டைக்காலப் பெருமையை அடையவும் ஐந்தாறு ஆண்டுகளாக இரவு பகல் ஓயாது உழைத்து வருபவராகிய பண்டித ஆனந்தம் அவர்களாவார். ராஜயோகி வைத்திய சாமிநாத பிள்ளை 11-11-26ம் நாள் இரவு 1 மணிக்கு நல்ல நினைவுடன் யாதொரு மரணத் துன்பமுமின்றி சிவநாம ஒலியோடு தனது இல்லத்தில் சிவபதம் அடைந்தார். இவர் வயது 88. இவர் இறந்தது சித்த வைத்தியத்திற்கு ஒரு குறையாகும். மக்கள் நீண்டநாள் நோயின்றி உடல் வன்மையோடு வாழ விரும்புகின்றவர்கள் காலஞ்சென்ற வைத்திய சாமிநாத பிள்ளை அவர்களைப் போன்ற பெரியோர்களை பின்பற்றி நடந்துகொள்ளவேண்டியது இன்றியமையாததாகும்

## பாலிகா கல்பகம்

பெண்கள் முன்னேற்றத்தைக் கருதி "பிரஜாநுகூலன்" ஆசிரியரும் சிறந்த லோகாநுபவ பலநூலாசிரியருமான எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்களால் ஆக்கப்பட்டது. சிறுமியர்கள் உற்சாகத்துடன் படிக்கத்தக்க ரசமான நூறு நற்போதனைகள் கொண்டது. பாக்கட் அளவில் 86 பக்கங்கொண்ட இந்நூலின் விலை அணா 4.

கிடைக்குமிடம்:

பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

# ஜஸ்டிஸ் கக்ஷிக்கு ஓர் எச்சரிக்கை.

சமயசஞ்சீவிக் கூட்டம்.

சட்ட சபைத் தேர்தலின் முடிவுகளைக் கண்டு பலர் பலவிதமாக அக்கட்சியை தாக்கிப்பேசவும் எழுதவும் ஆரம்பித்து விட்டார்கள். உலக வாசனை இன்னதென்றே அறியாது சமயத்துக்கு தக்கபடி மனிதர்களுக்குத் தக்கபடி இச்சகம் பேசி வயிறு வளர்ப்பவர்கள் இந்த சமயத்தில் பெரிய மேதாவிகளைப்போல் அக்கட்சிக்கு ஞானோபதேசம் செய்ய வந்துவிட்டார்கள். இக்கூட்டத்தார், காங்கிரசுக்கென்று தங்கள் சுயநலம் கருதாமல் ஒரு காதொடிந்த ஊசியளவு உதவியும் செய்திருக்க மாட்டார்கள்; அல்லது ஜஸ்டிஸ் கட்சியின் மூலம் எவ்விதமான நன்மையுமாவது அடையாமலும் இருந்திருக்க மாட்டார்கள். அல்லாமலும், நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் சுவற்றுமேல் பூனையாகவும், சமயத்திற்கு தகுந்தபடியும், தங்களது சுய நலத்திற்கு ஆதாரமாகவும் அவ்வப்போது நடந்தும் பேசியும் எழுதியும் காலங்கழித்து வந்த இவர்கள் இப்போது "வகுப்பு வாதத்தால் ஜஸ்டிஸ் கட்சிக்கு தோல்வி என்றும் தேசிய வாதத்தால் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி ஏற்பட்டது என்றும் ஆதலால் வகுப்பு வாதத்தை விட்டுவிட்டு தேசிய வாதத்தில் சேருங்கள்" என்றும் பார்ப்பனர் மகிழும்படி பேசுகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார்கள் ஜெயித்து விட்டார்கள் என்று பார்ப்பனப் பத்திரிகைகள் கலம் போட்டு எழுதி இருக்குமானால் அப்போது இந்த சமய சஞ்சீவிகள் என்ன எழுதுவார்கள் பேசுவார்கள் என்பதை யோசித்துப் பார்த்தால இதற்கு மாறாக "காங்கிரஸ் தேச நன்மையை மறந்து ஒரு வகுப்பாருடைய அனுகூலத்திற்கு வசப்படுத்திக் கொள்ளப்பட்டது காங்கிரஸினால் சுயராஜ்ஜியக் கட்சி வகுப்பு பூசல் கிளப்பிவிட்டது. அதனால் ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி ஏற்பட்டது. ஆதலால் காங்கிரசுக்காரர் வகுப்புகளுக்கு ஆதாரமான கொள்கைகளை விட்டு தேசகாரியத்தில் பிரவேசிக்க வேண்டும்" என்று எழுதுவார்கள். அதுபோலவே இப்போது வேதாந்தம் பேசும் மேதாவிகள் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். இதைப்பற்றியும் ஆச்சரியப்படவில்லை. உலகம் உள்ளவரை இப்படி ஒரு கூட்டம் இருந்துதான் வரும். ஆண்மையோடு வாழ முடியாத நிலைமையை அடைந்தவர்கள் தங்களுக்கோ ஒருவித கொள்கையும் அற்றவர்கள் ஓடுகிற மாட்டின் வாலைப் பிடித்து முழக்குவார்களே தவிர ஓடாத மாட்டை ஓட்டுவிக்க முயலவே மாட்டார்கள்.

## வகுப்பு துவேஷமென்றால் என்ன? அது யாரிடம் இருக்கிறது?

உண்மையாக வகுப்பு துவேஷம் வகுப்பு வாதம் தேசியம், உரிமை என்பதற்கு இவர்களுடைய பொருள்தான் என்ன? பார்ப்பனர் தங்கள் சுயநலத்திற்கு ஒன்றைச் சொன்னால் இவர்களும் கூடவே கோவிந்தா போடுவதுதான் தேசியமென்பதற்கு அருத்தமா? உண்மையாகவே வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் பார்ப்பனரிடம் இருக்கிறதா? ஜஸ்டிஸ் கட்சியினிடம் இருக்கிறதா என்பதை இவர்கள் உணராதவர்களா?

நான் உயர்ந்தஜாதி நீ தாழ்ந்தஜாதி என்று சொல்லுபவனிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது நீயும் நானும் சமமானஜாதிதான் நம்மில் உயர்வு இல்லை தாழ்வு இல்லை என்கிறவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா?

நான் கடவுள் தலையில் பிறந்தேன் நீ காலில் பிறந்தாய் நான் உயர்ந்தவன்-பிராமணன் நீ தாழ்ந்தவன் வேசி மகன் வைப்பாட்டி மகன் சூத்திரன் என்று சொல்லுபவனிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? நீயும் நானும் ஒரே இடத்தில் இருந்து தான் பிறந்தோம். நீ பிராமணனுமல்ல நான் வைப்பாட்டி மகனுமல்ல, நாம் இருவரும் சகோதரர்கள் என்று சொல்லுகிற ஜஸ்டிஸ் கட்சியில் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது

தெய்வம் என்றும் தீர்த்தம் என்றும் மோக்ஷமென்றும் புண்ணியமென்றும் தர்மமென்றும் தானம் என்றும் உன் சொத்தும் வரும்படியும் எங்களுக்கே கொடுக்க வேண்டும் அதுகள் எல்லாம் எங்களுக்கேதான் சேர வேண்டும். நாங்கள் உயர்ந்த ஜாதியாரானதால் அவற்றை எங்கள் இஷ்டம்போல் விநியோகித்துக் கொண்டு நாங்களே சாப்பிடுவோம், நீங்கள் தாழ்ந்த ஜாதியாரானதால் உங்களுக்கு தாகத்திற்கு தண்ணீர் கொடுத்தலும் தோஷம் ஆதலால் அதில் ஒன்றும் பாத்தியமில்லை கொடுத்ததற்கும் நீங்கள் கணக்குக்கூட கேட்கக் கூடாது என்று சொல்லுகிறவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? நீ கேட்கிறபடியும் அதற்கு மேலும் உன் இழவுக்கு அழுதுவிடுகிறோம் ஆனால் அதுகளுக்கு கணக்கு மாத்திரம் காட்டு என்று கேட்பவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது

எங்கள் கால் கழுவின தண்ணீரை தீர்த்தமாக சாப்பிடுவதுதான் உங்களுக்கு புண்ணியம் நாங்கள் உங்களை தொட்டால்கிட்ட வந்தால் தெருவில் நடக்க விட்டால் கண்ணால் கண்டால்கூட எங்களுக்கு பாவம் என்று சொல்லுகிறவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? உங்கள் கால்களைக் கழுவின தண்ணீரை வேண்டுமானாலும் குடிக்கிறோம். அதற்கு பணம் வேண்டுமானாலும் கொடுக்கிறோம் எங்களையும் உள்ளே விடுங்கள் தெருவில் நடக்க விடுங்கள் என்று கேட்பவர்களிடம் வகுப்பு வாதமும் வகுப்பு துவேஷமும் இருக்கிறதா?

பார்ப்பனரில் பெரிய தேசிய வாதியும் காங்கிரஸ்காரருமான ஸ்ரீமான் வி. கிருஷ்ணசாமி அய்யர் தர்மப்பள்ளிக்கூடம் வைத்தார். அதற்கு பெரியபண்டும் வைத்தார்; ஆனால் அதில் பார்ப்பனர்கள் மாத்திரம் படிக்கலாமே ஒழிய பார்ப்பனரல்லாதார்கள் படிக்கக்கூடாது என்று எழுதி வைத்திருக்கிறார். இவரிடம் வகுப்பு துவேஷமும் வகுப்புவாதமும் இருக்கிறதா? அல்லது திருப்பதியில் பார்ப்பனர் அல்லாதார் பணத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டு இருந்தும் அதில் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ளுங்கள் ஐயா என்று கெஞ்சுபவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா?

பார்ப்பனரல்லாதாரான தஞ்சாவூர் மகாராஜா சுமார் வருஷம் இரண்டு லட்சம் ரூபாய் வரும்படி வரும்படியான சொத்துக்களை தர்மமாக விட்டிருக்கிறார். அதை ஸ்ரீமான் எம். கே. ராமானுஜாச்சாரியார் ஜில்லாபோர்டு அக்கிராசனராயிருக்குமவரை அய்யங்கார் பார்ப்பனப் பிள்ளைகளே சாப்பிட்டுக்கொண்டு பார்ப்பனப்பிள்ளைகளே சம்பளமில்லாமல் படித்துக்கொண்டும் அய்யங்கார் பார்ப்பன உபாத்தியாயர்களே உத்தியோகம் பெற்றுக்கொண்டு லட்சக்கணக்கான ரூபாயை அனுபவித்து வந்தார்கள். வாசல் பெருக்கவும் எச்சிலை எடுக்கவும் தவிர வேறு காரியத்திற்கு பார்ப்பனரல்லாதார்களை உள்ளே விடாமல் அடித்துக்கொண்டிருந்தாரே அவரிடம் வகுப்புதுவேஷமும் வகுப்பு வாதமும் இருந்ததா? அல்லது இப்போது பார்ப்பனரல்லாதஸ்ரீமான் பன்னீர்செல்வம் ஜில்லாபோர்டு பிரசிடெண்டாகவும் ஸ்ரீமான் உமாமகேஸ்வரம்பிள்ளை தாலூகா போர்டு பிரசிடெண்டாகவும் வந்ததால் பார்ப்பனரும்பார்ப்பனரல்லாதாரும் சாப்பிடும்படியாகவும், சம்பளமில்லாமல் படிக்கும்படியாகவும் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களும் உத்தியோகம் பெறும்படியாகவும் செய்தார்களே இவர்களிடம் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா?

பார்ப்பனரல்லாத பெண்கள் ருதுவானால் பார்ப்பனர்கள் தான் முதல்முதல் சாந்தி முகூர்த்தம் செய்ய வேண்டும், பார்ப்பனர்களுக்கெல்லாம் பார்ப்பனரல்லாத பெண்கள்தான் வைப்பாட்டிகளாயிருக்கவேண்டும் ஒரு பார்ப்பனர் ஒரு பார்ப்பனரல்லாத பெண்ணை சம்போகத்திற்கு கூப்பிட்டால் உடனே அவள் புருஷன் கூட்டிக்கொண்டு வந்து படுக்கையை விரித்து படுக்க வைத்துவிட்டுப் போகவேண்டும். இல்லாவிட்டால் நரகம் கிடைக்கும், நரகத்துக்குப் பயப்படாவிட்டால் ஊரைவிட்டு வெளியே ஓடிப்போகவேண்டும் என்கிற கொடுமைதீர மலையாளக் குடிவார மசோதா கொண்டுவந்தால் அதை ஒழிக்கப்பாடுபட்ட ஸ்ரீமான் சி. பி. ராமசாமி அய்யரிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? இக்கொடுமை ஒழிக்க மசோதா கொண்டு வந்த ஸ்ரீமான் சி. கிருஷ்ணன் நாயரிடம் வகுப்பு துவேஷமும் வகுப்புவாதமும் இருக்கிறதா?

பொதுஜனங்கள் பணத்தால் ரிப்பேர் செய்யப்படுவதும், பொதுஜனங்களின் பணத்தால் நிர்வகிக்கப்பட்டு வருவதுமான அநேக முனிசிபல் தெருக்களில் பன்றி நாய் மலச்சட்டி, மலவண்டி பிணம் முதலியதுகள் போகலாம்; மனிதன் மாத்திரம் போகக்கூடாது. ஏனென்றால்: நாங்கள் பிராமணர்கள், நீங்கள் தாழ்ந்தவர்கள் ஆதலால் நடக்கக்கூடாது என்று சொல்லுபவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும்

இருக்கிறதா? அல்லது நாங்களும் மனிதர்கள்தானே, நாய் கழுதை பன்றியைப் போலாவது எங்களை நினைக்கவேண்டாமா என்று கேட்பவர்களிடம் வகுப்புவாதமும் வகுப்புத்துவேஷமும் இருக்கிறதா?

நீயும் நானும் இந்துமதம்; இந்து மதத்திற்கு ஆதாரம் வேதம்; நான்தான் அதைப் படிக்க யோக்கியதை உள்ளவன் நீ சூத்திரனதால் அதைப் படிக்கக்கூடாது என்று சொல்லுபவர்களிடம் வகுப்புத்துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? எங்கள் மத ஆதாரத்தையாவது படிக்கக்கூடாதா? நாங்கள் என்ன அவ்வளவு தாழ்ந்தவர்களா? அது எதில் இப்படிச் சொல்லியிருக்கிறது அதையாவது பார்க்கக்கூடாதா என்று கேட்பவர்களிடம் வகுப்புத் துவேஷமும் வகுப்புவாதமும் இருக்கிறதா?

மக்களுக்கு சமத்துவமும் ஆண்மையும் சுயமரியாதையும் சம்பாதித்துக் கொடுப்பதாய் பார்ப்பனரல்லாதாரிலேயே மிகுதியும் கொடுக்கப்பட்ட பணத்திலும் காங்கிரஸ் பொதுப்பணத்திலும் குருகுல ஆச்சிரமம் வைத்து பார்ப்பனக்குழந்தை சாப்பிடுவதை பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்தால் பாவம் என்று சொல்லுகிறவர்களிடம் வகுப்பு வாதமும் வகுப்புத் துவேஷமும் இருக்கிறதா? அல்லது எங்கள் பணத்தையேவாங்கிக்கொண்டு எங்கள் குழந்தைகளுக்கேதாழ்வையும்சின்னத்தனத்தையும் சிறுவயது முதலே படிப்பிக்கிறீர்களே இது தர்மமாகுமா என்று கேட்கிறவர்களிடம் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா?

ஒரு பிராமணக்குழந்தை சாப்பிடுவதை ஒரு பிராமணரல்லாத குழந்தைபார்த்துவிட்டால் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன் என்று சொன்ன ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியாரிடம் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அவருக்கு போட்டியாய் நின்ற ஸ்ரீமான் முத்தையா முதலியாரிடம் வகுப்புவாதமும் வகுப்புத் துவேஷமும் இருக்கிறதா?

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் மக்கள் பிறவியில் வகுப்பு வித்தியாசம் இல்லை என்கிற ஒரு தீர்மானம் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கராலும், எஸ். ராமநாதன் அவர்களாலும் கொண்டுவந்து நிறைவேற்றியவுடன் காங்கிரசை விட்டு வெளியேபோன எம். கே. ஆச்சாரியாருக்கும் காங்கிரஸ் கமிட்டியில் இருந்து ராஜினாமா கொடுத்துவிட்ட ஸ்ரீமான்கள் சி. ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், டாக்டர் சாஸ்திரி, சந்தானம் வரதாச்சாரி ஆகிய பார்ப்பனர்களிடமும் வகுப்புத்துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது இத்தீர்மானம் கொண்டுவந்தவர்களிடமும் ஆதரித்தவர்களிடமும் இருக்கிறதா?

முனிசிபாலிட்டி பொதுக் குழாயில் தங்கள் வகுப்பார்களைத்தவிர மற்ற வகுப்பார் தண்ணீர் பிடிக்கக்கூடாது என்றும் இன்ன படித்துறையில் தங்கள் வகுப்பார்களைத் தவிர தண்ணீர் மொள்ளக்கூடாது குளிக்கக்கூடாது என்றும் இன்ன படித்துறையில் தங்கள் தூரமான ஸ்திரீகளைத்தவிர வேறு யாரும் துணி துவைக்கக்கூடாது என்றும் சொல்லி இடம் ஒதுக்கி வைத்துக்கொள்ளுகிறவர்களிடம் வகுப்புத்துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா? அல்லது எல்லாரும் தண்ணீர் மொள்ளலாம் எல்லாரும் தண்ணீர் பிடிக்கலாம். எல்லாப் பெண்டுகளும் குளிக்கலாம் துவைக்கலாம் என்று சொல்லுகிறவர்கள் இடம் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் இருக்கிறதா?

பார்ப்பனரல்லாதார் லட்சக்கணக்காய் செலவுசெய்து கோவில் கட்டினால் நீ சூத்திரன் நீ வைசியன் நீ வாணியன் நீ நாடான் நீ பஞ்சமன் நீ இதுவரை வாலாம், நீ இதுவரை வரலாம், நீ வாசற்படி கிட்டக்கூட வரக்கூடாது, நீ திருமதிலைக்கூட தொடக்கூடாது நீ தெருவழிகூட நடக்கக்கூடாது என்று சொல்லுகிறவர்களிடம் வகுப்பு வாதமும் வகுப்பு துவேஷமும் இருக்கிறதா? அல்லது சுவாமி, சுவாமி கொஞ்சம் கண்ணால் பார்த்து ஓடிப்போகிறோமே கொஞ்சம் காலைத்தொட்டு கும்பிட்டுவிட்டு ஓடிப்போகிறோமே என்று கெஞ்சுகிறவர்களிடம் வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும இருக்கிறதா? இன்னமும் ஜஸ்டிஸ் கட்சியையும் அதன் தலைவர்களையும் வகுப்புத் துவேஷக் கட்சி வகுப்பு வாதக் கட்சி என்கிறவர்கள நன்றாய் யோசித்து சுயராஜ்யக் கட்சியிலோ காங்கிரஸ் கட்சியிலோ ஒத்துழையாமைக் கட்சியிலோ எந்தப் பார்ப்பனத் தலைவராவது வகுப்பு துவேஷமும் வகுப்பு வாதமும் இல்லாதவர்கள் இருக்கிறார்களா? என்பதையும், சுயராஜ்யக் கட்சியிலோ காங்கிரசிலோ வகுப்புத் துவேஷமோ வகுப்பு வாதமோ நீங்கக்கூடிய ஏதாவது ஒரு திட்டம் நடைமுறையிலாவது எழுத்திலாவது இருக்கிறதா? என்பதையும் சுயநலத்தையும் அறிவீனத்தையும் விட்டு நடுநிலைமையில் இருந்து யோசித்து பார்த்தார்களானால் அவர்களுக்கு உண்மை தெரியாமல் போகாது. ஜஸ்டிஸ் கட்சியை வகுப்புத துவேஷம் வகுப்பு வாதம் என்று சொல்லுகிற எழுதுகிற எத்தனையோ மேதாவிகள் தங்களது உண்மையான தாயும் தகப்பனுக்கும் பொதுவாய் தங்கள் நெஞ்சில் கையை வைத்துப் பார்ப்பார்களானால் தாங்கள் உண்மை பேசுகிறார்களா பார்ப்பனர்கள் புன்சிரிப்புக்கோ தங்களது வயிறு வளர்ப்புக்கோ சுயநலத்துக்கோ பேசுகிறார்களா? அல்லது தேசத்திற்கோ தங்களது சமூகத்திற்கோ பேசுகிறார்களா? என்பது விளங்காமல் போகாது.

## இவைகளுக்கு பயப்படக்கூடாது.

இக்கூட்டங்களை நாம் கணக்கில் வைக்க வேண்டிய அவசியமேஇல்லை. இதுகளை மதிக்காமலும் இதன் எதிர்ப்புகளுக்கு சளைக்காமலும் இருக்கத்தக்க நிலைமை எப்பொழுது பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு வருகிறதோ அன்றுதான் வகுப்புத் துவேஷமும் வகுப்பு வாதமும் வகுப்பு ஆதிக்கமும் ஒழிந்து மக்களுக்கு சுயமரியாதை எற்படுமே அல்லாமல் இதுகளை மதித்துக்கொண்டும் இந்த எதிர்ப்புகளுக்கு பயந்து கொண்டும் உள்ளவரை சுயமரியாதை உண்டாகாது. சுயமரியாதை என்பது கிள்ளுக்கீரை அல்ல அதை அடைந்த சமூகமானாலும் தனி மனிதனானாலும் அவனுக்கு உலகமே தூசுக்கு சமானமாக இருக்கும். அச்சமூகத்தாரை, எந்த அரசாங்கமும் அக்கிரமமாய் ஆளமுடியாது. அதன்மேல் எந்த வகுப்பும் ஆதிக்கம் செலுத்த முடியாது. பார்ப்பனரல்லாத மக்களின் அறிவீனத்தையும் சுயமரியாதையில் லக்ஷியமற்றிருக்கும் விலங்குத் தன்மையையும் விளக்க இத்தேர்தலின் முடிவைவிட வேறு என்ன சாக்ஷி வேண்டும்?

## சர்க்கார் தயவையும் எதிர்பார்க்க முடியாது.

இதில் தோல்வியுற்றவர்கள் பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்கும் சுயமரியாதைக்கும் உழைப்பவர்களானால் அவர்கள் சட்டசபையையும் சர்க்காரையும் லட்சியம் செய்வார்களா? எந்த உலகத்திலாவது அன்னிய அரசாங்கத்தார்—ஒரு தேசமக்களின் அறிவீனத்தாலும் சொரணையற்ற தன்மையிலும் ஆண்டுகொண்டிருக்கும் அரசாங்கத்தார்—மக்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவே மானத்தையும் கற்பையும் மனச்சாக்ஷியையும் விற்கும்படியான நிலைமையில் தனது பிரஜைகளை வைத்திருந்தாலொழிய அரை நிமிஷமும் ஆளமுடியாத அரசாங்கத்தார்—அந்நாட்டு மக்களின் சுயமரியாதைக்கு உதவியாயிருப்பார்களா?

## நமது தற்கால வாழ்வு நிலை பொய்யா?

அன்றியும் பார்ப்பனரல்லாதார் கட்சி தங்களுக்கு இருப்பதாய்ச் சொல்லும் குறைகள் இல்லை என்றாவது தாங்கள் முன்னேற வேண்டுமென்று கோருவது குற்றமென்றாவது இப்போது அவர்கள் மற்ற வகுப்பார்களால் தாழ்வாய் மதிக்கப்படாமல் சமத்துவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்கிறார்கள் என்றாவது யாராவது சொல்ல முடியுமா? முதலாவது சர்க்காரரே நம்மை காங்கிரஸ் ஏற்பட்டதற்கு பிறகு பிற்பட்ட வகுப்பிலேயே சேர்த்து இருக்கிறார்கள். பார்ப்பனர்களோ நம்மை பஞ்சமர்கள் என்றும் சூத்திரர்கள் நாலாவது வகுப்பார் என்றும் சொல்லுவதோடு வைதீகத்தில் நம்மை சிஷ்யர்களாக்கி வைத்திருக்கிறார்கள் என்பதில் யாருக்காவது ஆக்ஷேபணை உண்டா? மற்றபடி ஜாதி வகுப்பு வைதீக நிலைமைகளை விட்டுவிட்டு அரசியலிலும் லௌகீகத்திலும் நமக்குத்தக்க உரிமை வேண்டுமென்றால் நீ படிக்கவில்லை உனக்கு புத்தியில்லை உங்களுக்கு வேலைபார்க்க சக்தியில்லை நிர்வாகத் திறமை இல்லை என்று சொல்லுகிறார்களே இவைகள் உண்மையாயிருந்தாலும் சரி பொய்யாயிருந்தாலும் சரி இந்தக் காரணத்தாலோ அல்லது இப்படிச் சொல்வதாலோ நாம் பின்னமைந்து இருக்கிறோம் என்பதையும் யாராவது மறுக்க முடியுமா?

## ஏமாந்து போகக்கூடாது.

ஆகவே இந்த நிலைமையிலிருந்து விடுதலையாகி முற்போக்கடைய வேண்டுமா வேண்டாமா? இதற்கு என்ன வழி என்பதை இப்பொழுது "வகுப்பு துவேஷம் தோல்வியுற்றது" என்று பிதற்றும் எந்த மேதாவியாவது இதுவரை சொன்னாரா? அல்லது செய்து காட்டினாரா? ஒன்றுமில்லாமல்

(இதன் தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

## நாகைத் தொழிலாளர் சங்கம்.

நாகை தென்இந்திய ரயில்வே தொழிலாளருக்கும் ஷை ரயில்வே அதிகாரிகளுக்கும் நாகையைவிட்டு பொன்மலைக்கு தொழிலாளர் குடி போக வேண்டிய விஷயமாய் ஏற்பட்ட சிறு தகராறு தீர்ந்துவிட்டதாகத் தெரிந்து சந்தோஷமடைகிறோம். ஆனாலும் மத்தியஸ்த தீர்ப்பினால் தொழிலாளருக்கு எவ்வித லாபமும் சவுகரியமும் ஏற்பட்டிருப்பதாய்ச் சொல்லக் கொஞ்சமும் இடமில்லை. தொழிலாளர்களுக்கு வெகு காலமாய் இருக்கும் சுதந்திரங்களை ரயில்வே அதிகாரிகள் பிடுங்கிக் கொள்வதாய்ச் சொன்னதில் மத்தியஸ்தர் வந்து பிடுங்கிக் கொள்வது சரியல்லவென்று சொல்லிவிட்டதினால் தொழிலாளருக்கு லாபம் என்ன? இத்தகராறு ரயில்வேக்காரர்கள் முன் யோசனையின்மேல் செய்த கெட்டிக்காரத்தனமான தந்திரமே அல்லாமல் வேறல்ல. ஏனெனில் வெகு காலமாய் வீடு வாசல்களுடன் வாழ்ந்துவந்த தொழிலாளர்களை ஊரைவிட்டு வேறு ஊருக்கு வாருங்கள் என்று கூப்பிட்டால் யாருக்கும் வர இஷ்டமிருக்காது என்பதை உணர்ந்தும் இதற்காக ஏதாவது அதிகப்படியான சுதந்திரங்கள் கேட்பார்கள் என்று எண்ணியே முன் ஜாக்கிரதையுடன் ஏற்கனவே இருக்கிற சுதந்திரத்தையும் பிடுங்கிக் கொள்வோம் என்று சொன்னால் மத்தியஸ்தத்திற்கு வருகிறவர்கள் அப்போது 'அதிக சுதந்திரமும் வேண்டாம் இருக்கிற சுதந்தரங்களையும் பிடுங்கிக் கொள்ள வேண்டாம்" என்று பைசல் செய்துவிடுவார்கள் என்று செய்ததேயன்றி வேறில்லை. ஆனபோதிலும் தொழிலாளர்கள் கண்ணியமுடன் ஒப்புக்கொண்டது மிகவும் பாராட்டத் தக்கதே. ஆனாலும் தொழிலாளர்கள் கட்டுப்பாட்டுடன் இருந்து தங்களது கிரமமான நன்மைகளையும் பிரதிநிதித்துவங்களையும் பெருக்கிக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

நமது மாகாணத்தில் உள்ள தொழிலாளர் சங்கங்களிலெல்லாம் நாகை தொழிலாளர் சங்கமே கூடியவரை உண்மையான சங்கமென்றே சொல்லலாம். அது மற்ற சென்னை முதலிய சங்கங்களைப் போல் "தலைவர்"களின் நலத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் ஆயுதமாயிராமல் தங்கள் காலிலேயே நிற்கத் தகுந்த யோக்கியதையை அடைந்திருப்பதைப்பற்றி மிகுதியும் பாராட்டுகிறோம். அதற்கு தலைவர்களாக தொழிலாளர்கள் தங்களுக்குள் ஒருவரையே தெரிந்தெடுத்துக் கொண்டது அச்சங்கத்தின் முற்போக்குக்கும் நமது மாகாணத்தில் அதுவே ஆதிக்கம் பெற்ற சங்கமாகப் போகிற தென்பதற்கும் அறிகுறியாகும். இனியும் அச்சங்கம் அரசியல் சூழ்ச்சியிலிருந்தும் முழுதும் விடுபட்டு விட்டால் அதனால் நமது மாகாணத்து மற்ற தொழிலாளர் சங்கங்கள் எவ்வளவோ பயனடையத்தக்க மாதிரிக்கும் பின்பற்றத்தக்க மாதிரிக்கும் வந்துவிடும் என்றும் உறுதி கூறுவோம். அதன் நிருவாகஸ்தர்களும் தங்களுக்குள் ஏதாவது சிறு அபிப்பிராய பேதங்கள் இருந்தால் அதை தொழிலாளர்கள் நன்மைக்காக விட்டுக் கொடுத்து ஒற்றுமையுடன் உழைத்துத் தொழிலாள உலகத்துக்கு நன்மை செய்யுமாறு வேண்டுகிறோம்.

## உலகசேவையின் திமிர்புளுகு

கனம் "குடி அரசு" பத்திரிகாசிரியருக்கு அடியிற்கண்ட விஷயத்தை தட்டாமல் வெளியிட வேண்டுகிறேன்,

ஐயா,

சென்னை சட்டசபை அபேட்சகரான திரு. சி. வி. வெங்கிட்டரமண ஐயங்கார் 10-10-26-ல் இரவு சுமார் 8 மணிக்கு திருப்பூர் மணியம் முத்துசெல்லிக் கவுண்டர் வீட்டுக்கு வந்திருந்தார். அப்பொழுது சின்னியம்பாளையம் எஸ். கே. முத்துசாமியும் கள்ளிப்பட்டி கே. ஆர். விஸ்வநாதனும் இருந்தார்கள். 24-10-26ல் "குடி அரசில்" வெளியான விதமாக சம்பாஷணை நடந்தது வாஸ்தவமே. மகா-ா-ா-ஸ்ரீ என் தகப்பனார் அச்சம்பாஷணையை நிறுத்துவதற்கு அதிக சிரமப்பட்டார். என்ன சிரமப்பட்டும் கால்மணிநேரம் நிற்காமல் சம்பாஷணை நடந்துகொண்டே இருந்தது. "உலகசேவை" என்ற பத்திரிகை இதை "குடி அரசின்" பொய்க்களஞ்சியமென்று தனது பொய்க் களஞ்சியத்தை வெளியிட்டிருக்கின்றது. இம்மாதிரி ஒரு பெரிய நாணயமான பத்திரிகையை அலட்சியமாகவும், அவமரியாதையாகவும் அக்டோபர் 31ல் வெளியிட்டிருப்பது உலகசேவையின் சூழ்ச்சிப் பிரசாரத்திற்கும் பொய்ப்பிரசாரத்திற்கும் ஒரு சாக்ஷியாகும்.

இப்படிக்கு,
டி. எம். ராமசாமி,
மூன்றாவது குமாரன், திருப்பூர்.

## இதுகூட வகுப்பு துவேஷமா?

திருநெல்வேலி ஜில்லா தென்காசியிலுள்ள ஒரு சிவன் கோவிலில் சமஸ்கிருதத்தில் வேத பாராயணம் செய்தபிறகு தமிழில் தேவார பாராயணமும் செய்த பிறகு எல்லோருக்கும் விபூதிப் பிரசாதம் கொடுக்கவேண்டும் என்பதாக கோவில் அதிகாரிகள் ஏற்பாடு செய்தார்களாம். அங்கு வேதபாராயணம் செய்துவந்த பார்ப்பனர்கள் தேவாரம் பாராயணம் செய்தபிறகு விபூதி பிரசாதம் வாங்குவது தங்கள் உயர்வுக்கு குறைவு ஏற்பட்டதாக ஆகுமென்று நினைத்து கலகம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறதை வேறு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். கோவிலில் தேவாரம் படிக்க வேண்டுமென்று சொன்னால் கூட அது நமது பார்ப்பனர்களுக்கு வகுப்பு துவேஷமாய்ப் படுகிறதாயிருந்தால் பிறகு எங்கு போய்த்தான் பிழைக்கிறது.

தேவாரம் படிக்காததினால் மோக்ஷம் கெட்டுப்போய்விட்டது என்பதாக நாம் பயப்படவில்லை. மக்களிடம் அன்பு செய்வதைத்தான் கடவுள் பக்தி என்று நினைக்கிறோமே அல்லாமல் வேதபாராயணமும் தேவார பாராயணமும்தான் கடவுள் பக்தி என்று நாம் நினைப்பதில்லை. ஆனாலும் தமிழ்மொழி என்றால் இந்தப் பார்ப்பனர்களுக்கு இவ்வளவு ஆத்திரம் வருவானேன் என்பதுதான் நமது கவலையே தவிர வேறில்லை. நமது தென்னாட்டு பிரயாணத்தில் ஒரு சமயம் அங்கு போக நேரிடினும் நேரும்.

## தேர்தல் முடிவு.

**இந்திய சட்ட சபைக்கு.**

கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாத் தொகுதி.
ஸ்ரீமான் டி. பிரகாசம்.

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலித் தொகுதி
ஸ்ரீமான் எம். எஸ். சேஷ ஐயங்கார்.

**சென்னை சட்ட சபைக்கு.**

முகம்மதியர் மத்திய ஜில்லா கிராமத் தொகுதி.
ஜனாப் பஷீர் அகமது.

தென் கன்னடம் கிராமத் தொகுதி
ஸ்ரீமான் கே. ஆர். கரந்த், ஸ்ரீமான் ஷெட்டி

தென்னாற்காடு ஜில்லா கிராமத் தொகுதி.
ஸ்ரீமான்கள் கே. சீதாராம ரெட்டியார். ஆர். ஸ்ரீநிவாசய்யங்கார், கே. ராமச்சந்திர படையாச்சி.

கிருஷ்ணா ஜில்லா கிராமத் தொகுதி.
ஸ்ரீமான்கள் மீர்சாபுரம் ஜமீன்தார். காளேஸ்வர ராவ்.

இராமநாதபுரம், திருச்சி.
இந்திய கிருஸ்துவர் தொகுதி.
ஸ்ரீமான் டேனியல் தாமஸ்.

கீழ் கோதாவரி ஜில்லா கிராமத் தொகுதி
ஸ்ரீமான்கள் கே. வி. ஆர். சாமி நாயுடு, பி. வேங்கடரத்னம்

பல்லாரி ஜில்லா கிராமத் தொகுதி
ஸ்ரீமான்கள் ஏ. ரங்கநாத முதலியார். பி. சிவராவ்.

நெல்லூர் ஜில்லா கிராமத் தொகுதி
ஸ்ரீமான்கள் வேங்கடகிரி குமார ராஜா. பெஜவாடா ராமச்சந்திர ரெட்டி.

கர்நூல் ஜில்லா கிராமத் தொகுதி
ஸ்ரீமான்கள் ஜி. ஹரிசர்வோத்தம ராவ். சாபரெட்டி.

மத்திய ஜில்லா இந்திய கிறிஸ்தவத் தொகுதி
ஸ்ரீமான் ஆர். என், ஆரோக்கியசாமி முதலியார்.

## நிலைகுலைந்துள்ள தமிழ் மக்கள் என்னும் சிறு புத்தகம்.

இன்றைய குடி அரசு வேறு பக்கத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்து வெளியீட்டில திருவாளர் ரா. கோவிந்தசாமி பிள்ளை அவர்களால் எழுதிப் பிரசுரிக்கப்பட்டிருந்த, நிலைகுலைந்துள்ள தமிழ் மக்கள் என்னும் வியாசத்தை டிம்மி 1க்கு 16 சைசில் 16 பக்கம் கொண்ட சிறு புத்தக ரூபமாய் வெளியிட ஒரு கனவானால் ஏற்பாடாகி வருகிறது.

அப்புத்தகம 100க்கு 2ரூ. விகிதம் வேண்டியவர்களுக்கு 25 புத்தகத்திற்கு குறையாமல் எவ்வளவு புத்தகம் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். ஆகையால் வேண்டியவர்கள் எழுதித்தருவித்துப் பொதுஜனங்களுக்கு விநியோகிக்கலாம். இதுபோலவே இன்னமும் பல வியாசங்கள் புத்தக ரூபமாய் வெளிவரும்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

# குடி அரசு.

அக்ஷய-ஹூ ஐப்பசி-மீ 29-உ

## வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது இந்திய மக்களில் பார்ப்பனர் தவிர மற்றெல்லா வகுப்பார்களாலும் வெகு காலமாக அதாவது இந்திய பிரதிநிதித்துவம் என்கிற வார்த்தை என்றைக்கு ஏற்பட்டதோ அது முதல் அரசாங்கத்தாரைக் கேட்டுவரப்படும் ஒரு கோரிக்கை.

இக்கோரிக்கை ஏற்பட்ட காலம் முதல் இந்நாட்டுப் பார்ப்பனர்கள்-குறிப்பாய் தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் பல வழிகளிலும் தந்திரங்களிலும் சூழ்ச்சிகளிலும் அது ஈடேறாமல் இருப்பதற்காக வெகு பாடு பட்டு வந்திருக்கிறார்கள். என்ன பாடு பட்டும் அரசியல் இயக்கங்களான காங்கிரசும் அரசாங்கமும் அதை ஒப்புக்கொண்டு அது ஒரு அளவு அமுலில் வரவும் ஏற்பாடு செய்தாய்விட்டது. உதாரணமாக இந்தியாவில் உள்ள இந்திய மக்களில் மகமதியர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்றும், சிக்கியர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்றும், கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானங்களென்றும், மகம்மதியர் அல்லாதாருக்கு இத்தனை ஸ்தானங்கள் என்றும் மகம்மதியரல்லாதாரில் பார்ப்பனர் அல்லாதாருக்கு இத்தனை ஸ்தானங்கள் என்றும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஆகியவர்களுக்கு பொதுவில் இத்தனை ஸ்தானங்கள் என்றும் பிரிக்கப்பட்டு 6, 7 வருஷ காலமாய் அதாவது மூன்று தேர்தலாய் அமுலிலும் வந்தாய்விட்டது. அதுபோலவே காங்கிரசிலும் கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும் மகம்மதியர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் சேர்ந்து மொத்தத்தில் இத்தனை ஸ்தானம் என்றும் தீண்டாத வகுப்பார் என்று சொல்லப்பட்ட ஒடுக்கப்பட்டவர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்றும் ஒதுக்கப்பட்டு அதுவும் சுமார் 5, 6 வருஷ காலமாக அமுலில் இருந்தும் வருகிறது என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமே. இப்போது அதை பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயத்தில் வகுத்திருக்கும் முறை காரியத்தில் பிரயோஜனப்படாததாயும் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் இடையூறாயும் இருப்பதால் அதையும் தெளிவுபடுத்திவிடவேண்டும் என்பதே இப்போது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்று சொல்வதின் பொருளே அல்லாமல் புதிதாக ஒன்றும் ஏற்பாடு செய்யவோ அல்லது கண்டு பிடிக்கவோ யாரும் கோரவில்லை. இக்கொள்கைகளை அரசாங்கத்தாரும் சுமார் 85 வருஷங்களுக்கு முன்னாலேயே ஒப்புக்கொண்டு 1840-ம வருஷத்தின் 125 வது ஸ்டேண்டிங் ஆர்டரில்விவரமாகச் சொல்லி இருக்கிறார்கள். அக்காலத்தில் இந்தியாவில் நிர்வாகம் செய்த வெள்ளைக்காரர்களும் இதை வற்புறுத்தி இருக்கிறார்கள்.

ஆனாலும் சகலஉத்தியோகங்களும் பதவிகளும் அரசாங்கத்தார் கைவசமே இருந்து அவர்களே ஏறக்குறைய சரிவர வினியோகித்து வந்ததால் அதற்கு ஆக யாரும் கொள்கை ஒன்று ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமே இருந்து வரவில்லை. ஆனால் காங்கிரஸ் என்பதாக ஒரு ஸ்தானத்தைச் சிருஷ்டித்துக்கொண்டு அதை தேசப் பிரதிநிதித்துவம் பொருந்தியது என்று சொல்லி அரசாங்கத்தை மிரட்டி அவர்கள் மூலம் சில பதவிகளும் பிரதிநிதித்துவங்களும் அதிகமாய் வினியோகிக்கச் செய்ததில் அவைகள் காங்கிரசில் உழன்றுகொண்டிருக்கிற பார்ப்பனர்களான ஒரு கூட்டத்தாருக்கே போய்ச் சேருவதைப் பார்த்த உடனும் மற்றவர்கள் காங்கிரசில் ஆதிக்கம் பெற முடியாமலும் மற்றவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்க முடியாமலும் கட்டுப்பாடாய் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்ததின் பலனாகவும் காங்கிரசில் விசேஷத் தீவிரவாதிகளாய் இருந்த பார்ப்பனரல்லாதார்களில் வடநாட்டில் மகம்மதியர்களும் தென்னாட்டில் மகம்மதியரல்லாதார்களுமான பார்ப்பனரல்லாதாரும் காங்கிரசினால் ஏற்படும் உத்தியோகங்களையும் பதவிகளையும் பிரதிநிதித்துவங்களையும் எங்களுக்கும் சமமாய் விகிதாசாரம் பங்கு கொடுக்கவேண்டும் என்றும் இல்லாவிட்டால் காங்கிரசுக்கு விரோதமாயிருந்து அரசாங்கத்தாரிடமிருந்தே நேரில் பெறபிரயத்தனம் செய்வோம் என்றும் வாதாடியதில்காங்கிரசிலுள்ள பார்ப்பனர்கள் மகம்மதியர்களுக்கு மாத்திரம் ஒப்புக்கொண்டு மற்றபடிமகம்மதியரல்லாதபார்ப்பனரல்லாதாருக்கு ஒப்புக் கொள்ளாமல் ஆக்ஷேபனை செய்தார்கள். இதன் பலனாய் அப்போது அரசியல் வாழ்விலும் காங்கிரசிலும் பிரதான ஸ்தானத்திலும் அதிபோகத்திலும் இருந்த ஸ்ரீமான்கள் டாக்டர் நாயர், தியாகராயசெட்டியார்போன்றவர்கள் தென் இந்தியர்களின் நல உரிமைச் சங்கம் என்பதாக ஒன்றை ஏற்பாடு செய்து அதில் தென் இந்தியாவிலுள்ள பார்ப்பனரல்லாதார்கள் எல்லோரையும் சேர்த்து,காங்கிரஸ் என்பது பார்ப்பன முன்னேற்றத்திற்கு ஏற்பட்டிருக்கிய ஆயுதமே ஒழிய ஜனப்பிரதிநிதித்துவம் பொருந்தியதோ அல்லது எல்லா மக்களும் சம உரிமை அடையத்தக்கினதோ அல்லவென்றும்,சுயராஜ்யம் என்பது பார்ப்பன ராஜ்யமேயல்லாமல் பொது மக்கள் ராஜ்யம் அல்லவென்றும் பிரசாரம் செய்ததின் பலனாய் காங்கிரஸ் ஆதிக்கமும் குலையத் தலைப்பட்டது. இதை அறிந்த பார்ப்பனர்கள் ஒன்று கூடி யோசித்து ஒரு தந்திரம் செய்தார்கள். அதென்னவென்றால் இப்போது ஸ்ரீமான்கள் சக்கரை, ஆரியா, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலிய காங்கிரசில் ஈடுபட்டிருந்தவர்களின் அபிப்பிராயத்தையும் அவர்களது பத்திரிகைகளையும் எதிர்க்கஎப்படி ஸ்ரீமான்கள் மயிலை ரத்தினசபாபதி முதலியார், பாவலர், குப்புசாமி முதலியார் என்கிற பெயருள்ளவர்களை தலைவர்களாக்கியும் "தேசபந்து" என்கிற பெயர்கொண்ட பத்திரிகையை உண்டுபண்ணவும் முயற்சி செய்தார்களோ அதுபோலவே அப்போதும் ஸ்ரீமான் கல்யாணசுந்திர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு என்கிற கனவான்களை தலைவர்களாக்கி "தேசபக்தன்" என்கிற பத்திரிகையையும் உண்டாக்கி டாக்டர் நாயர் முயற்சிகளை ஒழிக்கப் பிரயத்தனப்பட்டார்கள். ஆனால் அச்சமயம் பார்ப்பனர்களின்யோக்கியதையை டாக்டர் நாயர்போன்ற தேசபக்தர்கள் எடுத்துச் சொன்னவைகளை தேசம் நம்பியதே அல்லாமல் ஸ்ரீமான்கள் நாயுடு,முதலியார் "தேசபக்தன்" போன்றவர்கள் சொல்வதை ஜனங்கள் காது கொடுக்காததால் அதற்காக வேறு தந்திரமெடுத்து, எதுபோலவென்றால் மகாத்மாவின் ஒத்துழையாமை ஆரம்பமானவுடன் தென்னாட்டுப் பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் விரோதமாயிருந்தும் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் ஒத்துழையாமை சட்ட விரோதம் என்று சொல்லியும் ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார் ஏ. ரங்கசாமிஅய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி, முதலியவர்கள் சென்னை ராஜதானி காங்கிரஸ் கமிட்டியில் இருந்து ராஜிநாமாக் கொடுத்துவிட்டு வெளியில் போய் எவ்வளவோ தூரம் மகாத்மாவையும் ஒத்துழையாமையையும் தாக்கிப் பேசியும் எழுதியும் இவர்கள் ஜபம் செல்லாததால் நுழைந்துகொடுத்து உள்ளே போய்க் கூட இருந்தே ஒத்துழையாமையைக் குலைத்தார்களோ அதுபோல் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தார் கேட்கும் வகுப்புவாரி உரிமையை நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் காங்கிரசை எதிர்க்கக்கூடாது என்பதாக இப்போது போலவே தேசபக்தி வேஷத்தைப்போட்டு, அதற்கெதிராக ஒரு சங்கத்தையும் ஸ்தாபிக்கச்செய்து அதற்கு வேண்டிய பணங்களையும் பிரசாரங்களுக்கும் பத்திரிகை நடத்துவதற்கும் பணத்தையும்கொடுத்து பார்ப்பனரல்லாதாரை இரண்டாகப் பிரித்து அச்சங்கத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக மதிப்புக் குறையச் செய்தார்கள். அச்சங்கத்தின் மதிப்பு குறைந்துவிட்டது என்று தெரிந்தவுடனும் இவர்கள் பணம் கொடுத்து ஏற்படுத்தின சென்னை மாகாணச் சங்கமும் இப்பார்ப்பனர்களின் யோக்கியதையை அறிந்துகொண்டது என்று தெரிந்தவுடனும் இச்சங்கத்தையும் ஒழிப்பதற்குச் சூழ்ச்சிசெய்து இச்சங்கத்தில்

முக்கியமாயிருந்தவர்களையும் வசப்படுத்தி இதையும் அடியோடு ஒழித்துவிட்டார்கள். இதன் பலனாய் என்ன ஏற்பட்டது? டாக்டர் நாயர் கட்சியாகிய தென் இந்திய நல உரிமைச் சங்கத்தார் கேட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் போய் அதற்கெதிரிடையாய்த் தாங்களும் அதையே கோருவதாகச் சொல்லிய சென்னை மாகாணச் சங்கத்தார் கோரிய வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொண்ட தேசபக்தியும்போய் பழைய பார்ப்பன ஆதிக்கமே ஏற்பட்டு இதற்கு உதவிசெய்த ஸ்ரீமான்கள் திரு. கல்யாணசுந்தர முதலியாரும் டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரும் பார்ப்பனர்கள்மேல் பிணக்குக்கொண்டு காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்து விலகுவதாய் மிரட்டியும் "நீங்கள் போனால் வேறு ஒரு முதலியாரையும் நாயுடுவையும் சேர்த்துக் கொள்ளத் தெரியும்" என்று சொல்லி வெளியிலேயே அனுப்பிவிட்டுத் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொள்ள ஏற்பாடுசெய்து வருவதும் உலகம் அறிந்தது.

இதுபோலவே பார்ப்பனரல்லாத சங்கத்திற்கு அநுகூலமாய் சாக்ஷி சொல்லச் சீமைக்குப்போன டாக்டர் நாயர், ஸ்ரீமான் எல். கே. துளசிராம் இவர்களுக்கு மாறாக ஸ்ரீமான்களான ஒரு சக்கரைச் செட்டியாரையும் ஒரு செஞ்சையாவையும் சீமைக்கு பணம்கொடுத்து அனுப்பினார்கள். இப்போது இந்தப் பார்ப்பனர்கள் யோக்கியதையை அறிந்து ஸ்ரீமான் சக்கரைச் செட்டியார் அவர்களை விட்டு விலகியதும் அதற்கு பதிலாக ஸ்ரீமான்கள் ஒரு ஒ. கந்தசாமி செட்டியார் என்பவரையும், முன் பார்ப்பனரல்லாதாருக்காக சாக்ஷி சொல்ல சீமைக்குப் போயிருந்த எல். கே. துளசிராம் என்பவரையும் ஆசை வார்த்தைகள் சொல்லி தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டு அப்போது ஸ்ரீமான் சக்கரை செட்டியார் செய்த வேலையை இவர்களைக்கொண்டு செய்து வருகிறதோடு அவருக்குப் பதிலாய் இவர்களை உபயோகித்துக்கொள்ளப் போகிறார்கள். இவ்வளவு தீவிரமாகவும் இவ்வளவு பிரயத்தனமாகவும் இவ்வளவு செலவு செய்துகொண்டும் இது சமயம் இந்தப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் இபக்கத்திற்கு விரோதமாய் கட்சி சேர்த்துகிறதின் முக்கிய நோக்கமென்னவென்றால் 1920-வருஷத்தில் சில "சீர்திருத்தங்கள்" அரசாங்கத்தார் நமக்கு வழங்கி இருப்பதாய்ச்சொன்ன யாதாஸ்தில் "இன்னும் பத்து வருஷம் சென்றவுடன் இப்போது கொடுத்த சீர்திருத்தத்தை எப்படி உபயோகித்திருக்கிறீர்கள் மேல்கொண்டு உங்களுக்கு சீர்திருத்தம் கொடுத்தால் அதைச் சரியாய் உபயோகித்துக் கொள்ளக்கூடிய யோக்கியதை உங்களுக்கு இருக்கிறதா இல்லையா என்கிறதை பரீட்சித்துப்பார்த்து இன்னும் சில சீர்திருத்தம் கொடுப்போம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதின்படி சர்க்கார் வழக்கம்போல் 1928-லோ 1929-லோ ஒருகமிஷனை நியமிக்கப் போகிறார்கள். அந்தக் கமிஷனில் நமது பார்ப்பனர்களுக்கு மேல்கொண்டு "சீர்திருத்தம்" கொடுத்தாலும் சரி, கொடுத்திருப்பதையும் பிடுங்கிக்கொண்டாலும் சரி அதைப்பற்றியெல்லாம் கொஞ்சமும் கவலையில்லை. எப்படியாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதை ஒழித்துவிட்டால் அதுவே பார்ப்பனர்களுக்கு சுயராஜ்யமளிக்கமுடியாதிரியாகையால் அதை ஒழிக்கக் கட்சியும் பலத்தையும் சேர்க்கத்தான் இவ்வளவு தந்திரங்களும் சூழ்ச்சிகளும் பணச்செலவும் செய்வதே தவிர வேறில்லை. அதனால்தான் பார்ப்பனர் என்கிற கூட்டமே அடியோடு ஆண் பெண் அடங்கலும் கட்சி பேதம் அபிப்பிராய பேதம் இன்றி ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். இதற்காகவே ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியரும் அடிக்கடி பட்டணம் போவதும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் வெற்றிக்காக காத்திருப்பதும் அவர்கள் கூட்டங்களில் பேசுவதும் வகுப்புவாதம் மாத்திரம் கூடாது என்பதும் ஆகிய தந்திரங்களைச் செய்துவருவதும், ஸ்ரீமான் சீநிவாச சாஸ்திரிகள் வகுப்புவாதம் கூடாதென்பதும், பார்ப்பனரல்லாதாரிலும் மகமதியர்களிலும் கிருஸ்தவர்களிலும் தீண்டாதார் என்னும் வகுப்புகளிலும் கூலி கொடுத்து ஆள்களைப்பிடித்து வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாது என்று சொல்லச் செய்வதும், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அரசியலில் பேசக்கூடாது என்று சொல்லச் செய்வதுமான காரியங்களைச் செய்துவருகிறார்கள். ஆதலால் தமிழ் மக்கள் இதுசமயம் ஏமாந்து போகாமல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தையும் அதற்கெதிரிடையாய்ப் பார்ப்பனர் செய்யும் பிரசாரத்தின் நோக்கத்தையும், பார்ப்பனர்களுக்காக வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாய் பார்ப்பனரல்லாதார் கூலிப்பிரசாரம் செய்யும் நோக்கத்தையும் அவர்களுடைய யோக்கியதைகளையும் முன் பின் அபிப்பிராயங்களையும் பாமர மக்கள் சரியாக உணரும்படியான பிரசாரங்களைச்செய்து எப்படியாவது அதை அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையே செய்யவேண்டி வற்புறுத்துகிறோம்.

## சுயமரியாதைக்கு ஜே!
## சர்க்கார் உத்திரவு.

எல்லா கிராமம் கிராமாதிகாரிகளுக்கும்:-பொதுச்சாவடி, பொதுக் கட்டடம், கச்சேரி, பள்ளிக்கூடம், பொதுக் கிணறு பகிரங்கமான பாதை, சந்தை முதலிய எல்லா இடங்களிலும் ஆதி திராவிடர்களுக்கும் பிரவேசிக்கச் சுதந்தரமுண்டு என்ற விஷயத்தையும், ஷை ஆதி திராவிடர்களைப் பறையர், சக்கிலியர், பள்ளர் என்று அழைக்காமல் ஆதிதிராவிடர்கள் என்றே அழைக்கவேண்டும் என்பதையும், பத்திரங்களிலும் ஆதி திராவிடர் என்றே பதியவேண்டியதையும் கிராமத்தில் பரவச் செய்து அமுலுக்குக் கொண்டு வரவேண்டியது. ஷையார்களுக்குப் பூமி அடமான விஷயங்களில் வேண்டிய உதவி புரிய வேண்டியது.

## 'வெற்றிக் கொண்டாட்ட' ஸம்ப்ரம்.

வெற்றிக் கொண்டாட்டம் என்னும் போல் நமது பார்ப்பனர்கள் தங்களது பார்ப்பனப் பிரசாரங்களை மறு தேர்தல்களுக்கும் கூடசேர்த்து இப்பொழுதிருந்தே நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். யாரோ வெகு பேர்கள் இவர்களை உத்தியோகம் ஏற்றுக்கொள்ளும்படியும் மந்திரி சபைகளை அமைக்கும்படியும் கேட்டுக் கொண்டது போலவும் வாக்காளர்களுக்குத் தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டி மந்திரி பதவிகளை மறுப்பது போலவும் வேஷம் போடுகிறார்கள். இதை பாமர ஜனங்களும் நம்பி "ஆ! ஆ!! நமது பார்ப்பனர்கள் என்ன, சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் என்ன, காங்கிரசுக்காரர்கள் என்ன, ஆகிய ஸ்ரீமான்கள் ஸ்ரீநிவாசய்யங்கார் சத்தியமூர்த்தி ஏ. ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள்எவ்வளவு நாணயக்காரர்கள்! மந்திரி உத்தியோகத்தைக்கூட வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள்" என்று இவர்களை பாராட்டுவதில் ஏமாந்து போனாலும் போவார்கள். இப்பொழுது ஜயித்தவர்கள் யார்? பார்ப்பனர்களா? சுயராஜ்ஜியக்கட்சியாரா? காங்கிரஸ் காரர்களா? யார் என்று தக்க ஆதாரத்துடன் பதில் சொல்ல யார் தயாராயிருக்கிறார்கள்? கட்சி என்பதற்கு என்ன பொருள்? சுதேசமித்திரனும் இந்துவுமான பார்ப்பன பத்திரிகைகள் கலம் கட்டி எழுதிவிட்டால் அதுவே முடிவு என்று அருத்தமா? கட்சியாக மித்திரன் குறித்துள்ள கணக்குப்படி காங்கிரஸ் காரர்கள் என்போர்கள் 47பேரில் காங்கிரஸ் மெம்பர்கள் எத்தனை பேர்? எது முதல் இவர்கள் காங்கிரஸ்காரர்கள்? என்றைய தினம் கையெழுத்து போட்டு சேர்ந்தார்கள்? காங்கிரசில் எந்த கொள்கைகளை பின் பற்றினார்கள்? மித்திரனும் இந்துவும் கண்ணை மூடிக்கொண்டால் உலகமே கண்ணை மூடிக் கொண்டதாக அருத்தமா? ஸ்ரீமான் சத்தியமூர்த்தி முதல் எந்த பிராமணராவது தங்களை காங்கிரஸ்காரர் என்று சொல்ல அவர்களுக்கு யோக்கியதை இருக்கிறதா? சத்தியமூர்த்தி இந்தப் ஆயுள்காலத்தில் என்றைக்காவது ஒருநாள் காங்கிரஸ் கொள்கைப்படி நடந்ததாகச் சொல்ல முடியுமா? என்றைக்காவது ஒரு நாள் சர்க்காரின் குற்றங்களைப்பற்றி சர்க்காரை கண்டித்துப் பேசியதாகவோ சர்க்கார் உத்திரவுகளை மறுத்ததாகவோ சர்க்கார் தயவை எதிர்பாராததாகவோ இருந்ததாகச் சொல்ல முடியுமா? அல்லது சர்க்காரிலிருந்து ஏதாவது ஒரு உத்தியோகம் கிடைப்பதாயிருந்து வேண்டாம் என்று சொன்னதாகயாராவது சொல்ல முடியுமா? அல்லது இன்றைய தினமாவது நமது சர்க்காரால் கொடுக்கப்பட்ட ஏதாவது ஒரு கவுரவ மெம்பர் ஸ்தானம் தான் அடைந்திருக்கவில்லை என்று

சொல்ல முடியுமா? மித்திரன் கலத்தில் "தலைவர்" தலைப்பில் பேர் போட்டவர் யோக்கியதையே இப்படி இருந்தால் மற்றபடி அந்த கூட்ட யோக்கியதையைச் சொல்ல வேண்டுமா? அந்த வரிசையில் பட்டம் பெற்றவர்கள் இல்லையா? புராவ சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இல்லையா? நேற்று ஒரு கட்சிப் பேர் இன்று ஒரு கட்சிப்பேர் சொன்னவர்கள் இல்லையா? நாளைபதினம் வேறு கட்சிக்குப்போகிறவர்கள் இல்லையா? இவர்கள் எல்லோரும் மித்திரனுக்கு காங்கிரஸ்காரர்கள் என்று எப்படித் தெரியும்? ஸ்ரீமான் வேணுடையக் கவுண்டர் காங்கிரஸ்காரரா? ஸ்ரீமான் ராவ் பகதூர் சி. வி. எஸ். நரசிம்மராஜு, காங்கிரஸ், உத்தியோகம் ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் சொன்னதை நம்பி வந்தேன் இப்போது அவர் பொய் பேசுகிறார்: ஆதலால் நான் சுயராஜ்யக் கட்சியையும் காங்கிரசையும் விட்டுப் போகிறேன் என்று சொல்லிப் போனவர் தானே? ஸ்ரீமான் முத்தையா முதலியார் தனது பிரசார அறிக்கையில் காங்கிரஸ் திட்டத்தையே ஒப்புக் கொள்ளாமலும் காங்கிரஸ் என்கிற வார்த்தையைக் கூட பிரஸ்தாபிக்காமலும், காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாகவே நான் சட்ட சபையில் அது செய்கிறேன், இது செய்கிறேன் என்று சொல்லி எழுதி ஓட்டு வாங்கினவர் தானே? ஸ்ரீமான் சேதுரத்தினமய்யர் தான் காங்கிரஸ் வாதி என்று சொல்லாமலும் சொல்லுவதற்கு பயந்து கொண்டும் வேறு பெயரைச் சொல்லிக் கொண்டு அபேக்ஷகராய் நின்றவர் தானே? அதுபோலவே ஜனாப் டாஜுடீனும் தான் சுயராஜ்ஜியக் கட்சியாரோடு சேருவதில்லை என்று தனது சமூகக்காரருக்கு வாக்குக் கொடுத்தவர் தானே! ஸ்ரீமான் கோபால் மேனனுக்கும் காங்கிரசுக்கு என்ன சம்பந்தம்? அவர் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு நின்றாரா? ஸ்ரீமான் பூ. ராமசாமி அய்யருக்கு காங்கிரஸ் என்றால் என்ன என்று தெரியுமா? அவர் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு நின்றாரா? இரண்டு அடுகள் போட்ட சண்டையின் பலனாக ஒழுகின ரத்தத்தை குடித்து வந்தவர் தானே? இதில் யாரைப்பற்றி எழுதுவது? யாரின் காங்கிரஸ் பக்தியைப்பற்றி வருணிப்பது? ஸ்ரீமான் எஸ். கே. துளசிராம் என்றைக்கு காங்கிரஸ் மெம்பர் ஆனார்? மகாத்மா காந்தி யாசினுப்பிரம்சர்க்கா மதுரையில் சுற்றவைக்கிறேன் என்றாரே அன்றைக்கா? தேவஸ்தான மசோதா செய்யும்போது பனகால் கூடவே இருந்தாரே அன்றைக்கா? பார்ப்பனரல்லாதார் சார்பாக காங்கிரசின் அக்கிரமங்களை எடுத்துச் சொல்ல சீமைக்குப் போனாரே அன்றைக்கா? அல்லது மதுரை கலக்டரிடம் சட்டசபை அபேக்ஷக விண்ணப்பம் போடும்போது தன்னை காங்கிரஸ் காரர் அல்லவென்றும் சுயராஜ்யக் கட்சிகாரர் அல்லவென்றும் தான் சுயேச்சை தாராள கொள்கைக்காரர் என்று வாக்கு மூலம் கொடுத்தாரே அன்றைக்கா? அல்லது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் மதுரை பிளாட்பாரத்தில் ஸ்ரீமான் துளசிராம் அவர்களை, பனகால் ஒழிந்துவிட்டார், தங்களை நான் மந்திரியாக்கப் போகிறேன் என்று வாக்குக் கொடுத்தாரே அன்றைக்கா? என்றைக்கு என்று மித்திரன் சொல்லக்கூடுமா? உத்தியோகங்களுக்கு ஆசைப்பட்டு மந்திரி கட்சி என்று பனகாலின் வாலை பிடித்துக்கொண்டு திரிந்து உத்தியோகப்பட்டம் பதவிகள் எதிர் பார்த்தபடி கிடைக்காததால் ஏமாந்து போய் மந்திரி கக்ஷியுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்த சிலரை தாங்கள் ஆசை வார்த்தைகள் சொல்லி ஏமாற்றி தங்கள் ஆளுகள் என்று பெயர் கொண்டதினாலேயே அவர்கள் காங்கிரஸ்காரர்கள் ஆகிவிடுவார்களா? உத்தியோகம் இல்லை என்று தெரிந்தால் இவர்களுடன் இருப்பார்களா? உத்தியோகம் கிடைப்பதாயிருந்து ஒப்புக் கொள்வதாகவே இருந்தால் இப்போது வாக்குத் தத்தம் செய்து சேர்த்திருக்கும் ஆட்களுக்கெல்லாம் உத்தியோகம் கொடுக்க முடியுமா? கொடுக்காவிட்டால் இந்தப் பார்ப்பனர்களைவிட்டு மறுபடியும் பனகாலிடம் போய் சேரமாட்டார்களா? மூன்று மந்திரி மூன்று காரியதரிசி ஒரு பிரசிடெண்டு ஆக 7 ஸ்தானங்களை 50 "காங்கிரஸ்கார"ருக்கும் 25 "சுயேச்சைக்கார"ருக்கும் ஆக 75 பேருக்கு எப்படி பங்கிட்டுக் கொடுக்க முடியும்? அப்படி கொடுப்பதாயிருந்தால் பார்ப்பனர்களுக்கும் கொடுக்க வேண்டாமா? மகம்மதியர்களுக்கும் கொடுக்க வேண்டாமா? கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்க வேண்டாமா? அல்லது இவர்கள் ஒப்புக்கொள்வதில்லை என்றால் கவர்ன்மெண்டு ஆபீசு கதவடைக்கப் போகுமா?

வெற்றி வெற்றி என்று வள்ளிக் கோவில் அடிபடுவதைத் தவிர தேசத்திற்கோ சமூகத்திற்கோ அல்லது பார்ப்பனர்களுக்கோ முக்கால்துட்டு லாபமுண்டா? பணங்களைவாரி இறைத்தது தான் பலன் தொண்டை கிழிய கத்தினது தான் பலன் அல்லாமல் சாதிப்பது ஒன்றுமில்லை என்பதோடு மறுபடியும் பனகால் ராஜ்யத்தை வெற்றிலைபாக்கு வைத்து அழைக்கப் போகிறார்கள் என்பது உறுதி என்றே சொல்வோம். இதுகள் எல்லாம் பொது ஜனங்களுக்கு தெரியாது என்று நினைத்து கலம் போட்டு 47 பேர்களின் பெயர்களை எழுதிவிட்டால் ஜஸ்டிஸ் கட்சி செத்துப்போய்விடும், இங்கிலீஷ் அரசாங்கம் மந்திரிகள் கட்டில் மூழ்கிப்போகும் தாங்கள் போய் கைகொடுத்து மறுபடியும் கூட்டி வரலாம் அதன்மூலம் பார்ப்பனர் ஆதிக்கம் நிலைத்துவிடும் என்று நினைத்துக்கொண்டு சனவுகண்டதாக தெரிகிறது.

அதைப்பற்றி இங்கு யாருக்கும் கவலையில்லை. இன்னமும் 98 பெயர்களையும் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் பட்டத்தையும் போட்டுக்கொண்டாலும் நமக்கு அதைப்பற்றி கவலையில்லை. இப்பொழுது எப்படி தங்களை சுயராஜ்யக் கட்சிக்காரர் என்று சொல்லிக்கொள்ளவே பயப்படும்படியாக ஆகிவிட்டதோ அதுபோலவே அடுத்த தேர்தலுக்குள் தங்களை காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளவும் தேசபக்தர்கள் என்று சொல்லிக்கொள்ளவும் பயப்படும்படியான காலத்தை இவர்களுடைய "தேசபக்தி" கொண்டு வரப்போகிறது நமக்குத் தெரியும். ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை இதுவரையில் யாரும் தப்பு என்று சொல்லி காங்கிரஸ்காரருக்கோ சுயராஜ்யக் கட்சிக்காரருக்கோ ஓட்டு கொடுத்துவிடவில்லை. என்பதும் நாம் அறிவோம். பாமர மக்களை ஏமாற்றியதிலும் மதப்புரட்டர்களுடையவும் மடாதிபதிகளுடையவும் பணங்காசு செலவு செய்ததிலும் தந்திரத்திலும் வஞ்சகத்திலும் ஓட்டுக்கிடைக்கிறதே அல்லாமல் சர்க்காருக்கு 10 ரூபாய் பூமிகந்தாயம் கொடுக்கும் ஒவ்வொரு ஓட்டரும் தேசத்தின் தத்துவத்தையும் நிற்பவர்களின் யோக்கியதையும் காங்கிரசின் நாணயத்தையும் கவனித்து ஓட்டுக் கொடுத்தார்கள் என்று யாராவது சொல்லமுடியுமா? என்று கேட்கிறோம். பார்ப்பனப் பத்திரிகைதான் இம்மாதிரி புரட்டுகளைச் செய்கிறது என்று சொன்னால் பார்ப்பனரல்லாதாரால் நடத்தப்படும் சில பத்திரிகைகளும் "ஈ அடித்தான் காப்பி," என்று சொல்வதுபோல் கொஞ்சமும் முன்பின் யோசிக்காமலும் பகுத்தறிவை உபயோகப்படுத்தாமலும் பார்ப்பனப் பத்திரிகைகளின் கூற்றை அப்படியே எடுத்து காப்பி அடித்திருக்கின்றன. அதோடுமாத்திரமில்லாமல் அவைகளையே பின்பற்றி தங்கள் அபிப்பிராயமும் எழுதுகின்றன. இவற்றை நினைக்கும் போது நமது மக்களின் நிலையைக்குறித்து வெட்கப்படாமலிருக்க முடியவில்லை.

ஆதலால் இதுகளுக்குத் தக்க மருந்து யார் மந்திரியாய் வருவார்கள், யார் அரசாங்கத்தை நடத்தப்போகிறார்கள், யார் அரசாங்கத்தை தகர்க்கப்போகிறார்கள் என்பதல்ல. அதைப்பற்றி கவலையும் வேண்டியதில்லை. எப்படி பாமர மக்களை இக்கொடுமையிலிருந்து தப்புவிக்கிறது என்கிற விஷயத்தில் தான் நமது நாட்டினிடமோ சமூகத்தினிடமோ உண்மையான கவலையுள்ளவர்கள் செய்யவேண்டியது என்பதாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

## ஈ. வெ. ராமசாமி நாயக்கர்

---

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அடுத்தவாரம் அதாவது நவம்பர் மீ 28ந் தேதிக்குப்பின் தென்னாட்டில் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைச் சங்கங்கள் நிறுவ அழைத்திருக்கும் கனவான்கள் வேண்டுகோளுக்கிணங்கி தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை, திருச்சிநாப்பள்ளி முதலிய இடங்களுக்குச் சென்று டிசம்பர் மாதம் 2, 3 தேதி வாக்கில் ஈரோடு வந்து சேருவார்.

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏதையோ தனக்கே புரியாமல் கூட்டத்தில் 'கோவிந்தா' போட்டுக்கொண்டுஇருந்துவிட்டும் இப்போது பார்ப்பனர்கள் கை உயர்ந்ததாககனவுகண்டு கொண்டும் "வகுப்புவாதம் தோற்றது." "வகுப்புதுவேஷம் தோற்றது" என்று சொல்லுகிற வார்த்தைகளை பார்ப்பனரல்லாதார் கேட்டு ஏமார்ந்து போகக் கூடாது. நாம் சுயமரியாதையைக் கோருவதும் அதற்கான நமது கொள்கைகளும் செய்கைகளும் வகுப்பு வாதமானாலும் சரி வகுப்பு துவேஷமானாலும் சரி நாஸ்திகமானாலும் சரி, ராஜத்துரோக மானாலும் சரி, வேதத் துரோகமானாலும் சரி, நரக சித்தியாவதானாலும் சரி, நமது கோரிக்கை கைகூடும்வரை உழைக்க வேண்டியதே அல்லாமல் அவர் என்ன சொல்லுகிறார் இவர் என்ன சொல்லுகிறார் சட்டம் என்ன சொல்லுகிறது என்பவைகளை கவனிக்கவே கூடாது என்று எச்சரிக்கிறோம்.

நமது எண்ணம் நல்ல எண்ணமா? கெட்ட எண்ணமா? நமது சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் பாடு படுகிறோமா? அல்லது யாரிடத்திலாவது துவேஷத்தினாலாவது துரோகம் செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தினாலாவது மற்றவர்களுடைய நியாயமான சுதந்திரத்தைப் பிடுங்கிக்கொள்ள வேண்டுமென்றாவது பாடு படுகிறோமா என்பதான இவைகளை மாத்திரம் தான் நாம் நன்றாய் கவனமாய் நடுநிலையில் இருந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டுமே அல்லாமல் மற்றபடி யோசிப்பது நமது வெற்றிக்கு இடையூறாகும்

### எந்தவிதத்திலும் நமது திட்டங்களை மாற்றக்கூடாது.

எனவே எந்த காரணத்தை முன்னிட்டும் நமது சுயமரியாதைத் திட்டங்களையும் முன்னேறும் பிரயத்தனங்களையும் கைவிட்டுவிடக் கூடாது என்றும் எச்சரிக்கை செய்கிறோம். இன்னும் [illegible] பொறுத்துத்தான் அனேகமாய் சட்டசபைத் தேர்தல் வரும். ஒரு சமயம் இப்போது இருக்கும் நிலையைப் பார்த்தால் மத்தியில் ஒருதரம் கலைத்து மறுபடியும் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் வந்தாலும் வரும். எப்படி ஆனாலும் அதைப்பற்றி கவலையுமில்லை அதற்காக நாம் இப்போது கவலை கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. நமது சுயமரியாதையின் கொடிய எதிரியான பார்ப்பனீயத்தை சுட்டு வீழ்த்துங்கள்! அதைக் கொன்று குழி தோண்டிப் புதையுங்கள்!. புதைத்தவுடனே அக்குழியில் இருந்தே உண்மையான சுயராஜ்ஜியம் முளைக்கும். அது எந்த வகுப்பாருக்கும் இடைஞ்சலாயிருக்காது சர்க்காருக்கும் இடைஞ்சலாயிருக்காது. பேராசைக் காரருக்கு மாத்திரம் கொஞ்சம் அதிருப்தியா யிருக்குமே அல்லாமல் வேறில்லை. அதுவும் நாம் உண்மையாய் வேலை செய்வதைக் கண்டால் தானாகவே சரிப்பட்டுப் போகும். ஆதலால் பார்ப்பனர்கள் பத்திரிகைகளையும் அவர்களது திண்ணைப் பிரசாரங்களையும் வயிறு வளர்ப்புப் பத்திரிகைகளையும் வயிற்றுச் சோற்று தேசபக்தர்களின் ஆரவாரங்களையும் கண்டு ஜஸ்டிஸ் கட்சியார் மருண்டு தங்கள் கொள்கைகளுக்கு பொது மக்களிடம் செல்வாக்கு இல்லை யென்றோ தங்களுக்கு பொது மக்கள் ஆதரவில்லை யென்றோ நினைத்துத் தங்களது கொள்கைகளை மாற்றிக் கொள்ள நினைப்பார்களானால் அது தற்கொலைக்கொள்கையேயாகும். ஜஸ்டிஸ் கட்சியார் பாமரமக்களை திருப்தி செய்ய என்று வேறு எப்பேர்பட்ட கொள்கைகளை ஏற்படுத்திக்கொண்டாலும் நமது சுய மரியாதையின் எதிரிகளான பார்ப்பனர்கள் அதையும் ஒழிக்கத்தக்க மற்றொரு கொள்கை ஆரம்பிக்கக் கூடிய தந்திர சக்தி வாய்ந்தவர்கள் என்பதையும் நினைப்பூட்டுகிறோம். சுயமரியாதைக்கும் சமூக சமத்துவத்திற்கும் இன்னும் தீவிரமான திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமே அல்லாது இதிலிருந்து கொஞ்சமும் பின்போகக் கூடாது.

### கதரையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சி திட்டத்தில் பார்ப்பனரல்லாதாருக்கே மிகுதியும் உதவத்தக்க கதர் திட்டத்தையும் இன்றியமையாததாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதையும் வற்புறுத்துகிறோம்.

### நமது கடமை.

பாமர மக்களிடை இவைகளை சரியானபடி பிரசாரம் செய்யவும் பார்ப்பனர்களின் சூழ்ச்சி பிரசாரங்களால் நமது பாமர மக்கள் ஏமாறுதிருக்கவும் தகுந்த பிரசாரங்கள் செய்ய வேண்டும் இவ்விஷயத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அசார்சமாயிருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது காரியம் குந்தகப்பட்டுப் போகும் என்பதை அழுத்திக் கூறுகிறோம். மற்றபடி அரசியல் விஷயமாய் அரசாங்கத்தோடு ஒத்துழையாமை செய்வதாகவோ அரசாங்கம் நடைபெறுமல் முட்டுக்கட்டை போடுவதாகவோ பார்ப்பனர்கள் சொல்வதை அடியோடு புரட்டு என்றே சொல்வோம். ஆகையால் அவைகளை நாமும் சொல்ல வேண்டியதில்லை. இவைகளைப்பற்றி மகாத்மாகாந்தி நடத்துவதாய்ச் சொன்னால் மாத்திரம் கவனிக்கலாமே. [illegible]ழிய சுயநலக் கூட்டத்தால் பாமரமக்களை ஏமாற்றுவதற்கென்றே காங்கிரஸ் பெயர் வைத்து செய்யும் புரட்டுகளுக்கும் ஏமாற்றுப் பிரசாரங்களுக்கும் நாமும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. கூடுமானவரை அப்புரட்டுகள் வெளியாவதற்கு தைரியமாய் பிரசாரம் செய்ய வேண்டும். ஜில்லாக்கள்தோறும் ஒவ்வொரு வாரப் பத்திரிகைகள் ஏற்பட வேண்டும். எந்த விதத்திலும் பார்ப்பன சம்பந்தமில்லாமலே அவைகள் நடைபெற வேண்டும். வைதீக விஷயத்திலும் லௌகீக விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் பார்ப்பனர் செய்யும் புரட்டுகளை தைரியமாய் வெளியிட வேண்டும் ஒவ்வொரு பிராசுதார்கள் அதன் நஷ்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். போலித் தலைவர்களையும் போலித் தேசியப் பத்திரிகைகளையும் வயிற்றுச் சோற்றுதேசபக்தர்கள் யோக்கியதையையும் துணிந்து வெளியாக்க வேண்டும். இவைகளை யெல்லாம் செய்யாமல் தேர்தல்கள் சமயத்தில் 1000, 10000, 50000, செலவழிப்பதில் ஒரு பயனும் உண்டாகாது. பார்ப்பனப் பிரசாரங்களையும் பார்ப்பனப் பத்திரிகைகளையும் பார்ப்பனத்தலைவர்கள் தந்திரங்களையும், பார்ப்பனமடாதிபதிகள்மகந்துக்கள்செய்யும் செலவுகளையும் பார்த்தாவது நாம் விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டாமா? எதை ஆதாரமாக வைத்து பாமர ஜனங்கள் ஒரு அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள் என்பது தெரியாதா? எதை ஆதாரமாய் வைத்து பாமர ஜனங்களின் ஓட்டுப் பெறுகிறார்கள் என்பது தெரியாதா? வெற்றியும் தோல்வியும் எதைப் பொறுத்திருக்கிறது என்பது தெரியாதா? இந்த விஷயங்களை அறிந்தவன் உண்மையான தொண்டனாயிருந்தால் ஒருக்காலும் வெற்றி தோல்வியைப் பற்றி கவலைப்படாமல் பாமர ஜனங்களுக்கு உண்மையைப் புகட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பான். ஆதலால் நாம் செய்ய வேண்டிய வேலையெல்லாம் நமது தற்கால கொள்கைகளை மக்களிடம் பரவச் செய்வதற்கு முயல வேண்டியதே அல்லாமல் மக்களைத்திருப்தி செய்யவோ அவர்களை ஏமாற்றவோ தகுந்தபடி கொள்கைகளை மாற்றுவதல்ல என்பதைவலியுறுத்துவதுடன் கொள்கைகளை மாற்றுவது சமூகத் தற்கொலை ஆகும் என்பதை மறுபடியும் எச்சரிக்கை செய்கிறோம்.

---

## கும்பகோணம் மருத்துவகுல சங்கம்.

கும்பகோணம் உல்லிக்கான் தெரு மருத்துவர் சங்கக் கட்டிடத்தில் மருத்துவர்களின் கூட்டம் ஒன்று (11-11-26)ல் நடைபெற்றது. நாகப்பட்டினம் திரு. கே. ஆர் ராஜகோபால் பிள்ளை அவர்கள் தலைமை வகித்து மருத்துவர்களின் தற்கால நிலைமையும் அரசாங்கத்தின் உதவியின்மைத்தன்மையும் என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள். திருவாளர்களான நாகைமுனிசிபல் கவுன்சிலர் துரைசாமி பிள்ளை, ஜி. கோவிந்தராஜுலு பண்டிதர், வேணுகோபால் மற்றும் சிலரும் சிலநேரம் பேசிய பின்னர் அடியில்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

(1) தஞ்சை ஜில்லா மருத்துவர்களின் இக்கூட்டமானது சென்னை மாகாணத் தமிழ் தென் நாடுகளில் இக்குலத்தவர்களுக்கு அடுத்தடுத்து செய்யப்பட்டுவரும் பல இடையூறுகளைக் குறித்து விண்ணப்பித்துக்கொண்டும் அரசாங்கத்தார் போதிய தற்காப்பு செய்துகொடாமல் பராமுகமாயிருந்து வருவதையும் திராவிட மாபெருந்தலைவர்களான சர். பி. தியாகராய செட்டியார்; எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை இவர்களது தலைமையில் நடைபெற்ற பெரிய மகாநாடுகளின் தீர்மானங்களின் மூலமாயும் அவ்வப்போது செய்துகொண்ட விண்ணப்பங்களைக்கவனித்தும் இக்குலத்தவர் தங்குறைகளை எடுத்துரைக்கவல்ல தம்மூர் ஒருவரை சட்டசபையில் நியமிக்காததையும் கண்டு இக்கூட்டம் மிகவும் வருந்துகிறது.

(2) இவ்வருட சட்டசபை தேர்தலை அடுத்து கொடுபட இருக்கும் நாமிநேஷன்களிலாவது நமது குலத்தவரும் சென்னை தலைமை மருத்துவச் சங்க தலைவருமான பண்டிட், எஸ். எஸ். ஆனந்தம் அவர்களை ஓர் பிரதிநிதியாய் நியமிக்கவேணுமாய் இக்கூட்டமானது மிகுதியும் வேண்டுகிறது.

(3) இக்கூட்டமானது சென்னை துரைத்தன அதிகாரிகட்கும் பிரதம மந்திரியார் அவர்கட்கும் தீர்மானங்களை அனுப்ப சங்க காரியதரிசி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறதென்று கும்பகோணம் ஸ்ரீமான் வேணுகோபால் அறிவிக்கிறார்

## நாகப்பட்டணம் பொருள்வைத்த சேரியில் பணக்கால் ராஜாவுக்கு வாழ்த்து.

நாகப்பட்டணத்தைச் சேர்ந்த திருச்சிக்கல் பொருள் வைத்த சேரி செங்குந்த மகாஜன சபை சார்பாகவும் செங்குந்த வாலிபர் சங்கத்தின் சார்பாகவும் 15—11—26-உ. க்குச்சரியான அட்சய ஆண்டு கார்த்திகை திங்கள் முதல் தேதி மாலை 5-30 மணிக்கு ஷை செங்குந்த முதலியார் சபையில் பணக்கால் ராஜா வெற்றியைப்பற்றி ஒரு கொண்டாட்டம் கொண்டாடப்பெற்றது. சபைத் தலைவர் செ. நமசிவாய முதலியார் தலைமை வகித்திருந்தார். ஷை சபை காரியதரிசியும் வாலிபர் சங்கத் தலைவருமான சொ. ச. கந்தசாமி முதலியார் பணக்கால் ராஜா அவர்கள் வெற்றியைப்பற்றியும், அன்னவர் சென்ற சட்ட சபையில் மந்திரியாய் இருந்து வந்த விஷயங்களைப் பற்றியும், தியாகராயரின் உகதழ சிஷரென்றும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவராக இருந்து செய்து வந்த ஊழியத்தைப்பற்றியும் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்திய பின்னர் செ. ராமச்சந்திர முதலியார்வாலிபர் சங்கத்தின் உபத் தலைவர் எழுந்து ஷை பணக்கால் ராஜாவை நான் பார்க்காவிட்டாலும் திராவிடர்களுக்கு செய்துவந்த பேர் உபகாரமும் அன்னவருக்கு ராமராய நிங்கார் என்ற நாமதேயம் பொருத்த முடையதென்றும், கல்வித்திறமை, சாந்தம், ஒழுக்கம் முதலிய குணங்கள் அமைந்திருப்பது ராமனுக்கு சட்டாகச் சொல்லவேண்டு மென்றும் பேசி முடித்தவுடன் வாலிபர் சங்கக் காரியதரிசி கா. நாகப்ப முதலியார் அவர்கள் வெற்றியடைந்த விபரமும் பேப்பர்களின் தடுமாட்டமும் என்ற விஷயத்தைப்பற்றி விரிவாகப்பேசி முடித்த பின் தலைவர் வெற்றியடைந்த பணக்கால் ராஜா அவர்களுக்கு யாவரும் வாழ்த்து கூறவேண்டுவது அவசியமென்று தெரிவிக்க பணக்கால் ராஜாவுக்கு ஜே! ராமராய நிங்காருக்கு ஜே! யென்று பெரும் ஆரவாரத்துடன் சந்தன தாம்பூலம் புஷ்பம் கல்கண்டு வழங்கியபின் கூட்டம் இனிது கலைந்தது.

---

## திருநெல்வேலி ஜில்லா மருத்துவகுல சங்கம்.

12—11—26-ல் திருநெல்வேலி சாலியர் தெரு மருத்துவர் மடத்தில் ஷை சங்கத் தலைவர் ஸ்ரீமான் மு. குலசேகரம் பண்டிதர் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது.

உள்ளூர் வெளியூர் அங்கத்தினர்கள் 200 பேர் வந்திருந்தனர். தலைவர் முன்னுரை நிகழ்த்திய பின்னர் "நமது குறைகளை நிவர்த்திக்க சென்னை சட்ட சபைக்குப் பொதுவாக சென்னை பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களையும் நம ஜில்லாவிற்காக டாக்டர் எஸ். திருவேங்கடத்தையும் நாமினேஷனில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது." என்ற தீர்மானம் துணைக் காரியதரிசி திரு. ச. முத்துசுவாமி பண்டிதர் அவர்களால் கொண்டுவரப்பட்டு [illegible] காரியதரிசி அறிக்கிறார்.

## தேவேந்திர உழவர் 2-வது மகாநாடு

நாளது மாதம் 24, 25 தேதிகளில் ஷை மகாநாடு ஸ்ரீமான் டாக்டர் பி. சுப்பராயன் எம். எல். சி., பாரிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் ஆகிய இவ்விரு கனவான்களில் ஒருவரது தலைமையில் சேலம் டவுனில் நடைபெறும். மகாநாட்டை அதிசமீபத்திலும்; முன் எச்சரிக்கைகளுமின்றிக் கூட்ட வேண்டி சில சந்தர்ப்பம் முன்னிற்பதால் முறைப்படி அறிக்கைகள் வெளியிடத் தவறியதற்கு விசனிக்கின்றோம். ஆயினும் அழைப்புப் பத்திரங்கள் அனுப்பப்பட்டுவிட்டன. இதைக் கடைசி வேண்டுகோளாகவும், அறிக்கையாகவும் பாவித்து குலாபிமானிகளும் தேசாபிமானிகளும் ஊக்கமுடன் விஜயம் செய்து மகாநாடு வெற்றிபெற முயற்சிக்குமாறு வேண்டுகின்றனம். போஜன இடவசதி இலவசம். 24—11—26 காலை 8 மணிக்கு சேலத்தில் ஆஜராயிருத்தல் நலம் என்று எம். சென்ன கிருஷ்ணு அறிவிக்கிறார்.

## பூளைமேடு.

கோயமுத்தூரைச் சார்ந்த பூளைமேடு நகரத்திற்கு விவசாய ராயல் கமிஷன் விசாரணைக் கூட்டத்தலருள் ஒருவராக வந்த சித்தூர் ஜில்லாபோர்டு பிரசிடெண்டு நம்மவர் ஸ்ரீமான் ராவ்பகதூர் B: முனுசாமி நாயடுகாரு B.A.B.L. M.L.C. அவர்கள் 17-11-26 தேதி விஜயம் செய்தார்கள். விவசாய விஷயமாகப் புதுவழியாகப் பயிர்த்தொழில் செய்யும் ஸ்ரீமான்கள் பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ் அவர்களின் விவசாயப்பண்ணைத் தோட்டத்தைப் பார்வையிட்டார்கள். ஸ்ரீமான் நாயடுகாரு பூளைமேட்டிலேயே ஸ்ரீரங்க விலாஸ் மில்ஸ் ஏஜண்டும் சர்வஜன ஹைஸ்கூல் மானேஜருமாகிய பி. எஸ். ஜி. அரங்கசாமி நாயடு அவர்களின் விருந்தினராக அமர்ந்திருந்து ஸ்ரீமான்கள் பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் அவர்களின் தர்மஸ்தாபனத்தைப்பற்றிய சகல விஷயங்களையும் பார்வையிட்ட பின்னர், மாலையில் சர்வஜன ஹைஸ்கூலில் மாணவர்களுக்கு அரிய உபந்யாசம் புரிந்து ஹாஸ்டல் ஹைஸ்கூல் தர்ம ஸ்தாபனம் இவற்றின் விசேஷங்களை மிகவும் பாராட்டிப் பேசி மகிழ்ச்சியுடன் சென்றார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

இனம்! இனம்!

சர்வரோஹ சம்ஹாரி

அமின்சார காந்தி.

இதை எல்லா வியாதிகளுக்கும் தாளிக்கணக்கில் உபயோகித்தால் உடனே குணமடையலாம். பாலர் முதல் விருத்தர்வரை யாதொரு பத்தியானுபானமின்றி, உபயோகிக்கக் கூடிய முறையில் உயர்ந்த சரக்குகளால், தயார் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இது ஒவ்வொரு குடும்பத்திலும், கப்பல், ரயில்வே பிரயாணிகளிடத்திலும் இருக்கவேண்டியது அவசியமாதலின், இன்றே அமின்சார காந்தியை வாங்கி பரீட்சியுங்கள். வெளியூர் ஏஜண்டுகள் தேவை. பாதிரி மருந்தும், கேட்டாலும் இனம். சிறு பாட்டல் 1க்கு ரூ 2.

தபால் சார்ஜ் வேறு.

அமின்சார காந்தி டிபோ

[illegible]

## பார்ப்பனீய அக்கிரமம்.

பார்ப்பனரல்லார்சுமார் 1500 ஜனங்களும், பார்ப்பனர்சுமார் 400 ஜனங்களும் நிறைந்த முடிகொண்டான்என்னும் ஊரில் பார்ப்பனர் ஒருவர் ஸ்கூலில் உபாத்தியாயர்வேலையிலும் போஸ்ட் மாஸ்டர் உத்தியோகத்திலும் அமர்ந்து வேலை பார்த்து வருகிறார். சுயநலம் கருதும் இப்பார்ப்பனர் தன் இனத்தார் பிள்ளைகளை மட்டும் பள்ளிக்கூடத்தில் வாசிக்க அமர்த்திக்கொண்டும், தபால் ஆபீசில் இனத்தார் உட்கார நாற்காலி முதலானவை கொடுத்து வருகிறதோடுமற்றப் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளுக்கு இடமில்லை என்றும், போஸ்டாபீசில் ரிஜிஸ்டர் செய்யவருகிறவர்களையும், கார்டு கவர் வாங்க வருகிறவர்களையும் புறக்கணித்து எட்டி ஒத்து ஒத்து என்று சொல்லி சௌகரியக் குறைவு செய்துவருகிறார். அதனால் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளுக்கு படிப்பு குறைவும், கார்டு, கவர் சரியான காலத்தில் கிடைக்காது பெரிய கஷ்டம் உண்டுபண்ணி வரும் பார்ப்பனர் தொல்லை பெரிய இடையூறாகவிருக்கிறது. இவர்கள்தானா சுயராஜ்ய [illegible] வழிகாட்டப்போகிறார்கள்? என்றும் [illegible] மனுஷர்களான நம்மவர் பார்ப்பனர் [illegible] தியில் சிக்கிக்கொண்டிருப்பதால் நாம் யாவரிடம் குறைசொல்லிக் கொள்வது. கடவுள்தான் வழிவிடவேண்டும். மேலான அதிகாரிகள் கவனித்து எங்கள் குறையை நிவர்த்தி செய்து ஷையூருக்கு பார்ப்பனர் அல்லாத ஒருவரை நியமித்து குறை நீக்குமாறு மேல் அதிகாரிகளையும் தெய்வத்தையும் வேண்டுகிறோம். நிற்க நன்றமாணிக்கம் ஆற்றங்கரையில் பார்ப்பனர் துறை என்று சொல்லி பார்ப்பனர் அல்லாதார் ஜலம் முதலானது எடுக்கக்கூடாது என்றும் குடிக்கக் கூடாது என்றும் சில முட்டிவாங்கும் பஞ்சாங்க பார்ப்பனர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்களாம். இவர்களுக்கு சுயராஜ்யம் கொடுத்துவிட்டால் நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும் என்பது போலத்தானாகும். ஆகையால் அவர்கள் சூழ்ச்சியில் சிக்காது இருக்குமாறு திராவிடர்களாகிய நம் சகோதரர்களை வேண்டிக்கேட்டுக் கொள்ளுகிறேன் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## வருந்துகிறோம்

ஈரோடு முதலாளி ஜனாப் கே. எ. ஷேக்தாவுத் சாயபு அவர்கள் தமக்கையும் ஜனாப் கா. காதர்மீரா உசேன் சாயபு அவர்கள் பாரியுமான ஸ்ரீமதி அம்மாள் அவர்கள் தனது 50-வது வயதில் வயிற்றில் சதை வளர்ந்ததின் காரணமாய் ஈரோடு கோஷா ஆஸ்பத்திரியில் ரணசிகிச்சை செய்யப்பட்டதின் பலனாய் 19..11..26 உ இரவு 730 மணிக்கு காலமானதைக் கேட்டு மிகுதியும் வருந்துகிறோம். ஜனாப்கள் முதலாளி அவர்களுக்கும் கா. காதர்மீரா உசேன் சாயபு அவர்களுக்கும் நமது ஆறுதலை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தென்காசி சிவாலயத்தில்

## தேவாரப் புறக்கணிப்பு.

ஐயா,

சென்ற மாதம் சென்னை எண்டோமெண்ட் போர்டு தலைவர் அவர்கள் எல்லாச் சிவாலயங்களிலும் தேவார பாராயணம் செய்த பின்தான் விபூதிப் பிரசாதம் யாவருக்கும் கொடுக்க வேண்டுமென்று அனுப்பிய தீர்மானத்தை சிவகமிட்டி மெம்பர்கள் தென்காசி தேவஸ்தானத்திற்கும் அனுப்பினார்கள். தருமகருத்தர்கள் அதை அமுலுக்குக் கொண்டுவர ஆலோசித்திருக்கையில் சிவகமிட்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் மேற்படி தீர்மானத்தை சரிவர நடத்துமாறு ஏற்பாடு செய்தார்கள். நவராத்திரி உற்சவத்தில் ஒருநாள் தரணிபீடத்தில் தேவார பாராயணம் நடக்கும்பொழுது பிராமணர்கள் சுண்டலுக்கு அடிபிடி சண்டையிட்டுப் பாராயணம் நடக்கத் தடை செய்தார்கள். அதன்மேல் அன்று தேவாரம் நடந்த பின்னரே நைவேத்யம் வழங்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதன்பின் அங்கு வந்திருந்த சைவ நன்மக்கள் வேண்டுகோட்படியும் கமிட்டி இன்ஸ்பெக்டர் உத்திரவுப்படியும் போர்டு உத்தரவு ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு வந்திருந்த பிராமணர்களிற் பலர் விபூதிப் பிரசாதம் வாங்காது வெளியே போய் விட்டார்கள். சிலர் பெற்றுச் சென்றார்கள். பின் சென்ற மாதக் கடைசி வெள்ளிக்கிழமை யன்று இவர்கள் பலர் ஒன்றுகூடி ஆலோசித்து போர்டு உத்திரவை உல்லங்கனம் செய்யுமாறு ஆலயத்திற்கு வந்திருந்தார்கள். அவர்கள் வேதபாராயணம் முடிந்தவுடன் அருச்சகர்களை விபூதி அளிக்குமாறு வற்புறுத்த, அவர்கள் தருமகருத்தர்கள் உத்திரவன்றியில் ஒன்றும் செய்ய முடியாதென்று கூற கோபங்கொண்டு விபூதிக் கப்பரையைப் பிடுங்கி எறிந்துவிட்டு, தேவாரம் நடக்கத் தடை செய்தார்கள். அதன்மேல் அருச்சகர்கள் கலவரம் நடக்குமோ வென்று பயந்து அம்மன் கோவில் அளிக்கதவை அடைத்து வெளியே வந்துவிட்டார்கள். பின் ஊஞ்சல் மண்டபத்தில் வைத்து விவகாரஞ் செய்தார்கள். இந்தச் சமாசாரத்தை அறிந்து சைவர்களிற் பலர் ஒருங்குதிரண்டு வந்தார்கள். முடிவில் சைவர்கள் ஆதாவின் பேரில் தருமகருத்தர்கள் போர்டு உத்திரவின்படியே தாங்கள் நடப்பதாயும் அதுவே தங்கள் கடமை என்றும், பிராமணர்கள் தங்கள் ஆக்ஷேபணையைப் போர்டுக்குத் தெரிவித்துப் பரிகாரம் பெறவேண்டுமென்றும் வீண் கலவரை செய்யக் கூடாதென்றும் சொல்லிவிட்டார்கள். அதன்பின் பிராமணர்கள் கோவிலுக்குப் போகும் வழக்கத்தை நிறுத்தி தாங்களே தெய்வமாகையால் ஆலயவழிபாட்டு அவசிய மில்லை என்றும் கேவலம் சாம்பலுக்கு அடிபிடி செய்வதில்லை என்றும் தங்கள் இளைஞர்களுக்கும் உபதேசித்து நிறுத்திவிட்டார்கள். பின் ஐப்பசி விஷு இரவு ரிஷபவாகன தரிசனத்தை அவர்கள் தாங்கள் அறவே நிறுத்தினதோடன்றி வக்கீல் கனம் சகஸ்ர நாமய்யரவர்கள் விபூதிப் பிரசாதம் வாங்கினவர்களையும், போர்டு ஹைஸ்கூல் ஆசிரியர் கனம் மீனாக்ஷிசுந்தரமய்யர் அவர்கள், திருக்கண் சாத்தினவர்களையும் பலவாறு நிந்தித்து இனிமேல் அவ்வாறு செய்யக் கூடாதென்று கண்டித்து விட்டார்கள்.

பின் பிராமணர்கள் ஐப்பசி-மீ 5வ இரவு தெற்குமாசிவீதிப்பிள்ளையார்கோவிலில் ஒரு கூட்டம்கூடி மாமூல்படி விபூதி கிடைக்காவிட்டால் மறுநாள் நடக்கும் ஐப்பசி உத்ஸவக்கொடி ஏற்றுக்கு ஒருவரும் செல்லக் கூடாதென்றும் அம்பாள் எழுந்தருளி வருங் காலத்து ஆராதிக்கக் கூடாதென்றும் அப்படி யாரேனும் செய்தால் அவர்களை சாதிப் பிரஸ்டம் செய்யவேண்டுமென்றும் தீர்மானித்ததுமன்றி ஆதிசைவர்களையும் பரிசாரகர்களையும் தடுத்தார்கள். ஆதிசைவர்கள் உடன்படாது மறுத்துவிட்டார்கள். அவர்களைப் பலவாறு பயமுறுத்துகிறார்கள். பரிசாரகர்கள் தங்களுக்கு சம்பளபாக்கி வந்தவுடனும் உத்ஸவம் முடிந்தவுடனும் நின்றுவிடுவதாய்ச் சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்தில் வழக்காடுவதற்கு தலைக்கட்டுக்கு ரூ. 0—8—0 வீதம் வரிவிதித்து வசூலிக்கிறார்கள். தங்கள் தீர்மானப்படி ஆலயஞ் செல்லவாவது வீதிவலம் வரும் அம்பாளை ஆராதிக்கவாவது இல்லாமல் கதவுகளை அடைத்துக்கொள்ளுகிறார்கள். ஒரு சிலர் தங்கள் வீடுகளிலே தேங்காயை உடைத்து தாங்களே கற்பூரம் காட்டுகிறார்கள். அக் கூட்டத்திலிருந்த வக்கீல் கனம் டி. வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் அவர்களைக் கண்டித்து தேவாரத்திற்குப் பின் விபூதி பெறுவதால் வரும் அகௌரவம் என்னவென்றும் அவ்வாறு வாங்குவது சரிதான் என்றும் சொல்ல அவரை போர்டு தலைவரவர்களோடு சேர்த்து நிந்திக்கத் தலைப்பட்டு அவர்களையும் ஒருவாறு இணக்கிவிட்டார்கள். அவர்கள் சொற்படி புரோகிதர்களும் வாத்தியார்களும் ஆலயஞ் செல்வதை நிறுத்திவிட்டார்கள். அவர்கள் சம்பந்தமின்றி அருச்சகர்களே அவ்வேலைகளைத் தாங்களே செய்து வருகிறார்கள். அருச்சகர்கள் இப்பொழுதுதான் தாங்கள் இன்னாரென்று உணர்ந்திருக்கிறார்கள். பிராமணர்களால் சுமக்கப்பட்டு வந்த ஆவாஹன ஸ்ரீபலிநாயகர் சைவநன்மக்களால் சுமக்கப்பட்டார். இப்பொழுது ஆலயதரிசனம், நந்திபெருமான் தொழிலை நடத்திவரும் பின்பாகங் காட்டும் பிராமணப் பெண்களில்லாமையால், அழகாய்க்கிடைக்கின்றது, ஆலயம் அமைதிகொண்டு விளங்குகின்றது. திருவிழா மத்தியில் திருக்குறள் தொண்டர் திருவாளர் சுப்பிரமணியதாஸ் அவர்கள் "தமிழர் கடமை" என்ற பொருள் பற்றியும், போர்டு ஹைஸ்கூல தலைமைத் தமிழாசிரியர் திருவாளர், அ. நாறும்பூநாத தேசிகர் அவர்கள் "சைவர் கடமை" என்ற பொருள்பற்றியும இரண்டு தினம் பெருஞ் சொற்கள் நிகழ்த்தினார்கள். தேவாரத்திற்குப்பின் விபூதி கொடுக்கும் வழக்கம் சுமார் 12 வருட காலமாக கடையத்திலும் திருக்குற்றாலத்திலும் அவ்வாலய தருமகருத்தர்கள் உறுதியுடன் நடத்திவருவதை ஒவ்வொரு ஆலய தருமகருத்தர்களும் நன்கு கவனிப்பார்களாக.,

உண்மையுரைப்போன், தென்காசி.

குறிப்பு:—

அறிவுடைய நன்மக்களே!

மேலே குறிப்பிட்ட செய்தி அதனைக் கண்ணுற் பார்த்து அறிந்த ஒரு அறிஞரால் எழுதப்பட்டது. இதனை வாசித்துப் பார்த்து நியாயம் யார்பாலது என்று நிதானித்து உங்கள் கருத்துக்களை பத்திரிகைகளுக்கு எழுதியனுப்புங்கள். திருநெல்வேலி ஜில்லா ஆலயங்களில் ஆகம விதிக்கும் சாதாரண அறிவுக்கும்மாறாக வேதபாராயணம் செய்த பின்னும் தமிழ்வேத பாராயணத்துக்கு முன்னும் விபூதியும் சுண்டல் முதலிய நிவேதனங்களும் பிராமணர்களுக்கு வழங்கப்பட்டும், தமிழ்வேத பாராயணத்துக்குப்பின் பிராமணரல்லாதார்களுக்கு விபூதியும் நிவேதனங்களும் வழங்கப்பட்டும் வந்தன. இந்தச் சீர்கேட்டை நீக்கவேண்டி சமயஸ்தாபன போர்டார் (Religious Endowment Board) செய்த உத்தரவை அனுசரித்து தரும கருத்தர்கள் தமிழ்வேத பாராயணம் செய்தபின்பே யாவருக்கும் விபூதியும் நிவேதனமும் வழங்கல் வேண்டும் என்று பிரயத்தனம் செய்தால் பிராமணர்கள் இவ்வளவு கடுமையான ஆக்ஷேபணை செய்கிறார்களே. இப்படி பிராமணர்கள் என்ன காரணத்தையிட்டு ஆக்ஷேபணை செய்கிறார்கள்? அவர்களுக்கு முதலில் விபூதி முதலியன கொடுக்க வேண்டாம் என்று சொன்னால் அவர்களுக்கு முன்னிருந்த முதன்மையும் பெருமையும் கெட்டுப் போம் என்று நினைக்கலாம். இறைவனுக்குச் செய்கிற எல்லா உபசாரங்களும் முடிந்த பிற்பாடு விபூதி முதலியன எல்லாருக்கும் வழங்கி வருவதனால் பிராமணர்களுக்கு என்ன அகௌரவம் உண்டாகும்! தமிழ்வேத பாராயணத்துக்கு முன் ஒரு வகுப்பினர்களுக்கு மாத்திரம் விபூதி முதலியன வழங்கல் இறைவனுக்கும் தமிழ் வேதம் சொன்ன சைவசமய ஆசாரியர்களுக்கும் அபசாரம் ஆகும் என்றும் தமிழ்வேத பாராயணத்துக்குமுன் பிராமணருக்கும் பின் பிராமணரல்லாதாருக்கும் விபூதி முதலியன வழங்கல் இருவகை வகுப்பினர்களுக்கும் பேதபுத்தியையும் பிளவையும் உண்டுபண்ணி நாட்டு நலத்துக்குக் கேடு உண்டாக்கும் என்றும் பிராமணர் பெரும்பாலர் அறிந்து நடவாமலிருக்கிறதைக் கேட்டு நாங்கள் மிக்க பரிதாபப்படுகிறோம். உயிர்களுக்கு உறுதிபயப்பதற்காக முன்னோர்களால் நமது நாட்டில் ஏற்படுத்தப்பட்ட ஆலயங்களிலும் மடங்களிலும் உள்ள சீர்கேடுகளை நீக்குகிறதற்காக சட்டசபையில் பிராமணரல்லாதார் பகிரதப்பிரயத்தனம் செய்து சமய ஸ்தாபன மசோதாக் கொண்டுவந்தால் அது முடிவு பெறக்கூடாது என்ற கருத்துடன் அவர்கள் எவ்வளவோ ஆக்ஷேபணையும் தடங்கலும் செய்தார்கள். நாட்டின் முழுநலத்தைக் கருதும்படியாயுள்ள விரிந்த மன அறிவை அவர்களுக்கு இறைவன் அளிக்க வேண்டுமென்று நாங்கள் மனமொழி மெய்களால் அவனைத் துதிசெய்கின்றோம். தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தார், திருநெல்வேலி.

## பார்ப்பனீயத்தை ஒழித்த கல்யாணங்கள்.

சேலம் அடுத்த தாதம்பட்டி என்னும் கிராமத்தில் பல்ஜிய நாயுடு வகுப்பைச்சேர்ந்த வீடுகளில் மூன்று கல்யாணங்கள் வெகு விமரிசையாய் நடந்தன. அம்மூன்று கல்யாணங்களுக்கும் பார்ப்பன புரோகிதர்கள் இல்லாமல் பார்ப்பனரல்லாதாரைக்கொண்டே முகூர்த்தம் செய்விக்கப்பட்டது. இவைகளில் ஒரு கல்யாண வீட்டுக்காரருக்குமாத்திரம் ஆரம்பத்தில் நாம் என் இதை முதல் முதலாகச் செய்யவேண்டும் மற்றும் யாராவது செய்த பிறகு நாம் செய்யலாம் என்கிற எண்ணம் மனதுக்குள்ளாக இருந்திருக்கிறது. அதற்கேற்றுப்போல் அவர் ஒரு பார்ப்பன புரோகிதரையும் தருவித்துவிட்டார். ஆனால் மற்ற இரண்டு கல்யாண வீட்டுக்காரரும்தைரியமாய்ச் செய்ய ஆரம்பித்த பிறகும், ஈரோட்டிலிருந்து கல்யாணத்திற்கு வந்திருந்த ஸ்ரீமான்களான அ. கோவிந்த நாயக்கர், வெ. மூத்து நாயக்கர், ரா. துரைசாமிநாயக்கர், வெ எல்ல நாயக்கர், எ. எல்ல நாயக்கர் கே. ராமசாமி நாயக்கர், ஈ. வெ ராமசாமி நாயக்கர் முதலிய இன்னும்பல கனவான்கள் சொன்ன பிறகும் தான் தருவித்த பார்ப்பன புரோகிதருக்கு ஏதோ பணம் கொடுத்தனுப்பிவிட்டு அவரும் பார்ப்பனரல்லாதாரைக்கொண்டே தனது வீட்டு முகூர்த்தத்தையும் நடத்திக்கொண்டார்.

ஆகவே இந்த மூன்று கல்யாணங்களும் எவ்வித சடங்குக்கும் பார்ப்பன சம்பந்தமில்லாமலே இனிது நிறைவேறிற்று. அதோடு அங்கு வந்திருந்த மற்ற பந்துமித்திரர்களும் தங்கள் தங்கள் வீட்டு சுபாசுப காரியங்களையும் இனி பார்ப்பனரல்லாதாரைக்கொண்டே செய்துகொள்ளுவது என்னும் அபிப்பிராயத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள்

இந்த வகுப்பார் பார்ப்பனீயத்தை நீக்கி கல்யாணம் செய்த கௌரவம் சேலம் தாதம்பட்டிக்கே கிடைத்ததோடு மற்றவர்களுக்கும் வழி காட்டின பெருமையும் அவர்களுக்குகிடைத்ததைப்பற்றி நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைகிறோம். அதோடு இதற்கு முக்கியமாய் நின்று வேலை செய்த ஸ்ரீமான்கள் எல்ல நாயக்கர், கே. ராமசாமி நாயக்கர் முதலிய கனவான்களையும் பாராட்டுகிறோம்.

### திருச்செங்கோடு தாலூகா ஆதி திராவிட மகாஜன சங்கம்

7—11—26ல் மேனியப்பிள்ளை ஆதி திராவிட தெரு, பகுதியம்மன் கோவிலில் ஸ்ரீமான் ஆர். சீரங்கன் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க்கண்டி சங்கம் நடத்தப்பட்டது மாலை 6 மணிக்கு பஜனைக் கோஷ்டியுடன் ஊர்வலம் வரப்பட்டது. சங்கத்திற்கு சுமார் 80 ஜனங்கள் வரையில் கூடினார்கள். இக்கூட்டத்தில் ஸ்ரீமான்கள் எஸ் சொக்கநாதன், எஸ். மாரிமுத்து, எஸ் வேலாயுதம், எஸ். கந்தசாமி அவர்கள் முதலியவர்கள் ஆதிதிராவிடர்கள் முன்னேறுவதற்கான வழிகளைப் பற்றியும், இனிமேல் ஒவ்வொரு கிராமங்களிலும் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் வெகு தெளிவாகப் பேசி இரவு 10-மணிக்கு மங்களத்துடன் சங்கம் முடிவு செய்யப்பட்டது. தோட்டிகளுக்கு வேலைக்குத் தகுந்த சம்பளமில்லை. அவர்களுக்குச் சம்பளம் இன்னும் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்கவேண்டு மென்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு சுகாதார விதிப்படி கிணறுகள் வெட்டிக் கொடுக்க வேண்டுமென்றும், தாலூகா போர்டு பாடசாலைகளில் வாசிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாக புஸ்தகம், சிலேட் முதலியவைகளைக் கொடுத்து பிள்ளைகளை விருத்தியடையச் செய்யவேண்டுமென்றும், ஆதி திராவிடர்கள் தனியாக போர்டு ஸ்கூல் வேண்டுமென்று கேட்பவர்களுக்கு கொடுத்துக் காப்பாற்ற வேண்டுமென்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு நற்காஸ்து நிலங்களை அடமானம் செய்து காப்பாற்ற வேண்டுமென்றும், சர்க்காரால் வெட்டப்பட்ட கிணறுகள் பாதைகள் முதலியவைகளில் எல்லா வகுப்பினரும் தாராளமாகப் போகலாம் என்ற போர்டு போட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று காரியதரிசி ஸ்ரீமான் எஸ். கந்தசாமி அறிவிக்கிறார்.

## தரும சொத்து.

வேலூர் தாலூகாவைச் சேர்ந்த பெரியாங்குப்பம், ஆலாங்குப்பம், நாச்சாரகுப்பம், கன்னடி குப்பம், செங்களிகுப்பம் கிராமங்களிலும் குடியாத்தம் தாலூகாவில் சில கிராமங்களிலும் ரேணுகுண்டா அன்னதான சத்திரத்தின் பேரால் சுமார் 500 ரூபாய் கிஸ்தியுடைய நிலங்களிருக்கின்றன. இந் நிலங்களில் வரும் வருமானம் மொத்தம் "ரேணுகுண்டாவில் உள்ள அன்னதான சத்திரத்தில் அன்னம் போடும் தரும கைங்கரியத்துக்கு உபயோகிக்க வேண்டும்" என்பது ஆதியில் இந்நிலங்களை ஏற்படுத்தியவரின் நோக்கமாம்.

ஆனால் தற்சமயம் அப்படி நடை பெறக்காணோம். சத்திரமும் கேவல ஸ்திதியிலிருப்பதாக தெரிய வருகிறது. இப்போது ஷை நிலங்கள் மொத்தம் ஓர் பிராமணரின் வசத்திலிருக்கிறது. தரும சொத்துக்களை பாது காக்கும் சபையார் இது விஷயத்தில் தக்கது செய்வார்களாக என்று ஒரு நிருபர் எழுதுகிறார்

---

## மதிப்புரை.

(வி-பா.)

### குடிகெடுக்கும் கள்.

சிலகாலமாக ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியாரவர்கள் மதுவிலக்குப் பிரசாரத்தில் விசேஷ கவனம் செலுத்தி வருதல் எல்லாரும் உணர்ந்த விஷயம். சம்பாஷணை ரூபமாக முன்னர் பத்திரிகைகளில் வெளி வந்த சிறு கதைகளைத் திரட்டி "குடி கெடுக்கும் கள்" என்னும் பேரால் ஒரு அழகிய சிறு நூல் வெளியிட்டிருக்கிறார். பேச்சு வழக்கிலுள்ள உரை நடையில் பாமர மக்கள் கட்குடியின் கேட்டை எளிதில் உணரு மாறு செய்திருப்பது போற்றத்தக்கது. விஷயத்துக்கேற்ற தோரணையில் 13 வேடிக்கைப்படங்கள் இந்நூலுள் அடங்கியிருத்தல் படிப்போர் மனதைக் கவர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் பெரிய எழுத்துக்களில் பதிப்பிக்கப்பட்டிருத்தலால் எழுத்துக்கூட்டி வாசிக்கும்படியானவர்களும் மாணவர்களும் தெளிவாக வாசித்துப் பொருள் தெரிந்து கொள்ளலாம். இந்நூல் தமிழ் நாட்டில் தாராளமாகப் பரவவேண்டும் என்னும் நல்லெண்ணத்தோடு ஒரு பிரதியின் விலை ஒரு அணாவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் விலைக்கும் தபால் செலவுக்குமாக ஒன்றரை அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்வாராக

கிடைக்குமிடம்:— மானேஜர்,
காந்தி ஆசிரமம், புதுப்பாளையம்
திருச்செங்கோடு வழி.

---

### குலசங்கர மாலை.

நம்பத்தகாத விஷயங்களுக்கு தெய்வத்தன்மை கொடுத்து பார்ப்பனர் சுயநலங்கொண்டு கட்டிய சாஸ்திரீயப் புரட்டுகளை வெட்ட வெளியாக்கும் குலசங்கர மாலை என்னும் இந்நூல் அறிவானந்த சுவாமிகள் என்னும் நாராயண வள்ளுவரால் செய்யுள் ரூபமாக இயற்றப்பட்டது. ரிஷிமூல பஞ்சகமும் விப்பிர பஞ்சகமும் தெலுங்கு வேமன பத்தியத்தில் பொருத்தமான சிலவும் அடங்கியிருக்கின்றன. விலை அணா 2.

கிடைக்குமிடம்:

கே. குமரவேல்
10. சொக்கக்கொத்தன் தெரு, மதுரை.

---

### தமிழ்ச் சிவஞான போதச்சிறப்பு.

அம்பா சமுத்திரம் வக்கீல் ஸ்ரீமான் காந்திமதிநாத பிள்ளை பி. ஏ. அவர்களால் இயற்றப்பட்ட இந்நூல் சைவசித்தாந்த நூல்களுட் சிறந்த தமிழ்ச் சிவஞானபோதத்தின் பொருட் சிறப்பை ஆராய்வதாகும். சிவஞான போதம் ஆராயத் தொடங்குவோர்க்கு இந்நூல் பெருந்துணை புரியுமென்று நம்புகிறோம். 70 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை 2 அணா.

இந்நூல் கிடைக்குமிடம்:—

மானேஜர்,
அருணா இவர் பிரஸ்,
அம்பாசமுத்திரம்.



இனாம்! லிவர் பாக்கெட் வாட்ச். இனாம்!

14 கேரட் பவுன்டன் பேனா.

புதிதாய் தருவிக்கப்பட்ட எங்கள் இரடியம் நிப்புள்ள பேனாவை வாங்குபவர்களுக்கு இம்மாதம்வரைதான் லிவர்வாட்ச் இனாம். வாட்ச் சரியான காலம் காட்டும். பேனா நீடித்தகாலம் உழைக்கும் பேனாவுக்கும் கெடியாரத்திற்கும் உத்திரவாதம் 5 வருஷம். சொல்பமும் குறைந்த விலை ரூ. 8 15 0.

லிவர் வாட்ச் இனாம் மூன்றுவர்கள். கைகாம் கொஞ்சம்தான்.

(டெக்கன் பென் டிப்போ, ஷை) 11 மலையப்ப. சவுகார்பேட், மதராஸ்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

ராஜவைத்திய ஆஸ்ரமம்.

சாஸ்த்ரி சீனிவாசம் பிரஸ்டேஷனுக்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்

ஆயிரக்கணக்கான

மூலபவுத்திர வியாதி பஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

## இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஹு டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... ... | ரூ. | 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ... | ரூ. | 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... ... | ரூ. | 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் ... ... ... | ரூ. | 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் ... | ரூ. | 2706—0—0 |
| நடை முதல் தொகை ... ... ... | ரூ. | 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவு:—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாசமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிசிட்டு ஒரு வருஷ கெடுவு:—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், முண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையி லாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டு மானாலும்செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள்செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி செம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைஸில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஒவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிட்டரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும்,ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாசிட்டரானால், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (௨) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.



ஸ்ரீவில்லிபுத்தூர்

## பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

அரரூட் பிஸ்கட்.

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

சூஸ்பரி பிஸ்கட்.

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

பழம் கேக்.

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தன தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இந் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலவீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபால் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.



S. G. இராமாநுஜலு நாயுடு எழுதிய

## பாலிகா கல்பம்.

100 போதனைகள் உள்ள 3-ம் பதிப்பு.

பெண்கள் பெரியவர்களாகும்போது அறியவேண்டியவைகளை எளிதில் ஓதுவிக்கிறதே சிறுமியர்கட்குப் புகட்டத் தகுந்த உசிதமான கல்வித்துறை. அதற்கேற்ப நன்கு அமைந்த சிறந்த பெரிய குடும்ப ஸம்ரக்ஷிணி நூல் இதுவே. இதற்கு இணைவேறில்லை. மிகு பயனுள்ளது. 4½ அணா ஸ்டாம்பு அனுப்புக. மூன்று பிரதிகள் வி. பி-ல் அணா 15.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.





பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது.

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்தும் பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

---

வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆநந்த குண போதினி."**

☞ ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0

சித்திரை மாதத்திலிருந்து வெளிவந் துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

---

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?

27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

**ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.**



ஆங்கில ஆசான்

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புஸ்தகம். உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு $1\frac{1}{2}$ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புஸ்தகம் 1- கு விலை ரூ 2—0—0.

அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், [illegible] 302 தங்கசாலை [illegible]

---

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மஹா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

---

இனாம் இனாம்!!

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

இயற்கை நலம் புகட்டும் நூல்.

[illegible] திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், [illegible] குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மத்ராஸ்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) [illegible] அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.